Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 08 வெள்ளிக்கிழமை (24.08.2012) பக்கங்கள் 20 ஓசை – 327

















# ஆனையிறவில் ஆக்கிரமிப்பு இல்லை
# பொதுமக்களுக்கு குழப்பம் வேண்டாம்
## தெளிவுபடுத்துகிறார் பிரதேச செயலர்

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகள் எதனையும் ஆனையிறவில் கடற்படையினர் ஆக்கிரமிக்கவில்லை என கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தன் தெரிவித்தார்.

ஆனையிறவுப் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியை முகாம் அமைப்பதற்காக கடற்படையினர் ஆக்கிரமித்துள்ளதாக வெளியான செய்திகள் குறித்து 'தினமுரசு' கண்டாவளைப் பிரதேச செயலர் முகுந்தனைத் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஆனையிறவுப் பகுதியில் கடற்படை முகாம் அமைக்க 5 ஏக்கர் காணியை கடற்படையினர் கண்டாவளைப் பிரதேச செயலகத்திடம் கோரியிருந்தனர். அந்த 5 ஏக்கரில் 2 ஏக்கர் ஆனையிறவு பங்களா இருந்த அரசகாணியாகும். ஏனைய 3 ஏக்கரும் உப்புக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானதாகும். இப்பகுதியில் பொதுமக்களுக்குரிய எவ்வித காணிகளும் இல்லை. உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தங்குவதற்கான விடுதிகளே அப்பகுதியில் இருந்தன.

இந்நிலையில் மக்களை அப்பகுதியில் மீள்குடியமர கண்டாவளை பிரதேச செயலகம் அழைப்பு விடுக்கவில்லை. மாறாக அதனை அண்டிய கிராமங்களில் மீள்குடியமரவே பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. எனினும் எந்தவொரு

19 ஆம் பக்கம் பார்க்க

## யசூசி அகாஷி இன்று கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

இலங்கைக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷி இன்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள சர்வதேச தொண்டு நிறுவனங்களான ஐ.ஓ.எம், சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகிய நிறுவனங்களுக்குச் சென்று குறித்த நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களை பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு அங்கமாக பிற்பகல் 2.30 மணியளவில் ஜெயந்தி நகருக்கு விஜயம் செய்யும் அவர் அங்கு அரச அதிகாரிகள். மற்றும் பொதுமக்களைச் சந்திக்கவுள்ளார்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அகாஷி கிளிநொச்சிக்கு விஜயம் செய்வது குறிப்பிடத்தக்கது. (29)

## மூங்கிலாறில் கோர விபத்து
## பள்ளி மாணவன் மரணம்

(முல்லைத்தீவு)


முல்லைத்தீவிலிருந்து யாழ். நோக்கி வந்த பஸ் ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு அந்த இடத்திலேயே மரணமானார்.

நேற்று மாலை 5.00 மணியளவில் புதுக்குடியிருப்பு மூங்கிலாற்றுப் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் சிவலோகேஸ்வரன் பிரதீபன் (வயது - 11) என்ற சிறுவனே பரிதாபமாக பலியானார்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திவந்தவர் தற்போது சிகிச்சைக்காக பலத்த காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து குறித்து விசாரணைகள் தொடர்கின்றன. (77)

# தொழில்துறை அபிவிருத்தி;
# சிசெல்ஸ் நாட்டு அமைச்சருடன் பேச்சு



(கொழும்பு)

சிசெல்ஸ் நாட்டின் மூலதனம், இயற்கை வளம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் பீற்றர் ஏ.ஜீ. சிநோன், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று மாலை சந்தித்துக் கலந்துரையாடினார்.

கொழும்பில் உள்ள பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இரு நாட்டினதும் சிறுகைத்தொழிலாளர்களது தொழில்துறை நலன் சார்ந்த விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக இரு நாட்டினதும் சிறுகைத்தொழிலாளர்களுக்கு இரு நாட்டிலும் பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்ப அறிவினை வழங்குவது குறித்து கலந்துரையாடப்பட்டதுடன் இதற்கான வசதிகளை இரு நாட்டிலும் மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

19 ஆம் பக்கம் பார்க்க

## பெண் சட்டத்தரணி மீது தாக்குதல்
## யாழ். நீதிமன்றில் நேற்று விபரீதம்

(திருநெல்வேலி)

நீதிமன்ற வளாகத்தில் பிரபல பெண் சட்டத்தரணி ஒருவர் வழக்கு சம்பந்தமாக வந்திருந்த மற்றொரு பெண்ணினால் தாக்கப்பட்டார்.

இப்பெண்ணுக்கான விவாகரத்து வழக்கு ஒன்றில் தாக்குதலுக்குள்ளான இப்பெண் சட்டத்தரணியே ஆஜராகியிருந்தார்.

வழக்கு முடிந்து முன்னாள் மாவட்ட நீதிபதியும், சட்டத்தரணியுமான சறோஜினி இளங்கோவன், யாழ். சட்டத்தரணிகளின் நூல் நிலையம் அமைந்துள்ள இடத்துக்கு அருகேயுள்ள மாடிப்படிகளில் ஏறும்போது திடீரென ஓடிவந்த மனநிலை பாதிக்கப்பட்ட இப்பெண் அவரது கன்னத்தில்

19 ஆம் பக்கம் பார்க்க

## அரசு – கூட்டமைப்பு பேச்சு;
## அனுசரணைக்கு அகாஷி தயார்

(கொழும்பு)



அரசுத்தரப்பிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான முறிந்து போன பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனுசரணையை வழங்கத் தான் தயாராக இருப்பதாக ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

# மணல் வியாபாரம் செய்கிறார் தவிசாளர்
# உழவு இயந்திர உரிமையாளர்கள் போர்க்கொடி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட காரைநகர் பிரதேச சபைத் தவிசாளரின் அச்சுறுத்தும் செயற்பாடுகளைக் கண்டித்து உழவு இயந்திர உரிமையாளர்கள் மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்கள் நேற்றைய தினம் பிரதேச சபை தவிசாளருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

காரைநகரில் பிரதேச சபை தவிசாளர் தனிப்பட்ட ரீதியில் மணல் வியாபாரம் செய்து வருகின்றார். எனினும் உழவு இயந்திர உரிமையாளர்கள், கட்டடப் பொருள் விற்பனையாளர்கள் மணலைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதேச சபைக்கு விண்ணப்பித்து நீண்ட நாட்களாகியும் அவர்களுக்கான அனுமதிப்பத்திரம் எதுவும் திட்டமிட்ட ரீதியில் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பிரதேச சபை தவிசாளர் தன்னிடமே மண் பெறவேண்டுமென இவர்களுக்கு அச்சுறுத்தலை விடுத்து வந்த நிலையில் நேற்றைய தினம் பிரதேச சபையின் 13 ஆவது மாதாந்தக் கூட்டம் இடம்பெற்ற வேளை மண் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரத்தை தமக்கு வழங்குவதுடன், பிரதேச

19 ஆம் பக்கம் பார்க்க

## நகரில் விபத்து;
## வயோதிபர் மரணம்
## சாரதி கைது

யாழ். பேருந்து நிலையத்தில் வயோதிபர் ஒருவரை பேருந்தால் மோதிக் காயப்படுத்திய சம்பவத்தில் பேருந்தின் சாரதி யாழ். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## அகாஷியின் அனுசரணை
## இனியும் வேண்டாம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளுக்கு சர்வதேசத்தின் மத்தியஸ்தம் தேவை இல்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது. அதன் பிரதான செயலாளர் வசந்த பண்டார இதனைத் தெரிவித்துள்ளார்.

யசூசி அகாஷி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும், அரசாங்கத்துகும் இடையிலான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க அனுசரணை வழங்குவதை ஏற்றுக்கொள்ள

19 ஆம் பக்கம் பார்க்க

# மக்கள் பணிகளை கழிவு ஒயில் தடுக்காது

## எதிர்க்கட்சி தலைவர் ஜெயபாலசிங்கம் தெரிவிப்பு

வலிகாமம் தெற்கு உடுவில் பிரதேச சபைக்கான புதிய கட்டடம் மீது சில விஷமிகள் கழிவு ஒயில் வீசி சேதப்படுத்திய சம்பவத்தை தாம் வன்மையாகக் கண்டிப்பதாக வலி.வடக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈ.பி.டி.பி.யின் பிரதேச அமைப்பாளருமான இராசரத்தினம் ஜெயபாலசிங்கம் (அன்பு) தெரிவித்தார்.

புதிய கட்டடத்தில் புதியதொரு சூழலில் பிரதேச சபை அலுவலகம் இயங்குவதை விரும்பாத தீயசக்திகளின் திட்டமிட்ட அநாகரீக செயலைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி வெளியான அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இப் பிரதேச சபையின் சிறப்பான செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில் அரசாங்கம் இப்புதிய கட்டடத்தை நிர்மாணிக்கவென 6.8 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்து நேர்த்தியான முறையில் இக்கட்டடம் அமைக்கப்பட்டு பணிகளையும் ஆரம்பிக்க விருந்த நிலையில் இக்கழிவு ஒயில் வீச்சுச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது.

நீண்டகால அழிவு யுத்தத்தை நாட்டு மக்கள் அனைவருமே பெரும் விலைகொடுத்து முடிவுக்குக் கொண்டு வந்துள்ள நிலையில், இந்த இயல்பான அமைதிச் சூழல் தொடர்வதை விரும்பாத சில தீயசக்திகளின் கோழைத்தனமான செயலாகவே இக்கழிவு ஒயில் வீச்சுச் சம்பவத்தையும் நாம் கருதுகிறோம். இனத்தின் பெயரால் ஏமாற்று அரசியல் நடத்துபவர்கள் இப்போதும் புலிப்பூச் சாண்டிகளைக் கிளப்பி தமது அதிகார கதிரைகளைக் காப்பாற்றிக்கொள்ள எண்ணுவார்களாயின், அது வெறும் பகற்கனவாகவே இருக்கும்.

இடம்பெற்ற இந்தக் கழிவு ஒயில் வீச்சுச் சம்பவத்தின் சூத்திரதாரிகளை விரைந்து கண்டுபிடிக்க உரிய நடவடிக்கைகளை உடன்மேற்கொள்ளுமாறு எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாதுகாப்புத் தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

ஜே/80, 81,82 ஆகிய கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்களின் நலன் கருதி யாழ். பொலிஸாரின் நடமாடும் சேவை ஒன்று யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியில் அமைந்திருக்கும் சன்மார்க்க வித்தியாலயத்தில் (பெருமாள் கோவிலுக்கு முன்பாக) நாளை சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 1.00 மணிவரை நடைபெறவுள்ளது. தேசிய அடையாள அட்டை பெறுதல் பற்றிய விபரம், கண் பரிசோதனை செய்து இலவச கண்ணாடி வழங்குதல், பொலிஸ் முறைப்பாட்டின் பிரித்தெடுப்பு வழங்குதல், கிளியறன்ஸ் சான்றிதழ் வழங்குதல் அத்துடன் சிவில் பாதுகாப்புக் கலந்துரையாடல், டெங்கு நோய் பற்றிய கலந்துரையாடல் ஆகிய நடைபெறும். அனைவரையும் பங்குபற்றுமாறு சிவில் பாதுகாப்புக் குழு அறிவித்துள்ளது.

# திருச்சிற்றம்பலப் பிள்ளையாருக்கு மஹோற்சவம் ஆரம்பம்




வல்வை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடரந்து 10 தினங்கள் நடைபெறுகின்றது. தினமும் பகல் திருவிழாவுக்கான வசந்தமண்டபப் பூசை காலை 10.30 மணிக்கும் இரவுத் திருவிழாவுக்கான வசந்தமண்டபப் பூசை மாலை 7.00 மணிக்கும் நடைபெற்றுவருகின்றது. (116)

# ஏகாதசி தீர்த்தம்

அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை ஏகாதசி தீர்த்தம் பக்தி பூர்வமாக நடைபெறவுள்ளது. காலை 8.00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9.00 மணிக்குச் சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று ஸ்ரீமத் நாராயண சுவாமி பூமாதேவி ஸ்ரீதேவி சகிதம் வீதியுலா எழுந்தருள்வார். மதியம் 12.00 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.(68)







பருத்தித்துறை புலோலி மேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளை சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழாவிலும் மலர் வெளியீட்டிலும் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் சங்கத் தலைவர் கே.தங்கராஜாவால் வரவேற்கப்படுவதையும், செல்விகளான பீ.மயூரிகா, எஸ்.எழிலினி ஆகியோர் தமிழ்த்தாய் வாழ்த்து இசைப்பதையும், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

# நல்லூர் திருவிழாவில்

# சயிக்கிள் பாதுகாப்பிற்கு அதிக கட்டணம் இருவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையினால் நல்லூர் உற்சவ கால தற்காலிக சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டணத்திற்கு அதிகமாக அறவிட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலைய உரிமையாளர்கள் இருவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். கோவில் வீதி, யாழ். பருத்தித்துறை வீதி, ஆகிய இரு பகுதிகளிலும் அமைந்திருந்த இரண்டு சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் மீதே இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இந்த இரண்டு சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் கோவில் வீதியில் அமைந்திருந்த சைக்கிள் பாதுகாப்பு நிலைய உரிமையாளர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்புக் கோரியதன் அடிப்படையில் அவரைச் செலுத்தும்படி தீர்மானிக்கப்பட்ட 20 ஆயிரம் ரூபா குற்றப்பணத்தை 10 ஆயிரம் ரூபாவாகக் குறைத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். தற்சமயம் அந்தத் தொகையை அவர் இதுவரை செலுத்தவில்லை. அதனால் அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதேவேளை யாழ். பருத்தித்துறை வீதியில் யாழ். மாநகர சபைக்குச் சமீபமாக அமைந்திருந்த சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தின் உரிமையாளர் மீதும் அத்தகைய புகார் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மீது குற்றப்பணம் அறவிடப்படும் இல்லை எனில் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. உற்சவ காலத்திற்கு முன்னர் குறித்த சைக்கிள் பாதுகாப்பு நிலைய உரிமையாளரை அழைத்து கட்டணம் தீர்மானிக்கப்பட்டது. (சைக்கிலுக்கு 5 ரூபா, மோட்டார் சைக்கிலுக்கு 10 ரூபா) பாதுகாப்பு நிலைய உரிமையாளர்களும் அதற்கு சம்மதித்தனர். அதற்கு மாறாக இவர்களில் சிலர் நடந்துகொண்டதனாலேயே இந்த நடவடிக்கை எனவும் தெரியவருகின்றது (பா)

தேர் ஏறும் சிற்பனை முருகனுக்கு



தேர் ஏறும் முருகன்
அனைத்து பக்தர்களும்
அருட்கடாட்சம் பெற்று எய்திட
முருகனை வணங்கி நிக்கின்றோம்.

சாம்பவி உணவகம்

குறிகாட்டுவான் வீதி, வங்களாவடி

உரிமையாளர் எஸ்.குமார்
தொ.பே. 0778997802

# இலக்கியப் படைப்பாளி நடராஜா இளம் சமூகத்திற்கு முன்னுதாரணம்

## கிளிநொச்சி அரச அதிபர்

(கிளிநொச்சி)



மண்ணின் வேராக மறைந்து வாழ்ந்து புகழ் சேர்த்தவர் எழுத்தாளர் திருநகர் நடராஜா என கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். கடந்த செவ்வாய்க்கிழமை மாலை கிளிநொச்சியில் "ஓய்வு" என்ற சிறுகதை நூல் வெளியீடு நடந்தது. இந்த வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கும்போது,

மக்களுக்கான சேதிகளைச் சொல்ல வேண்டும் என்பதற்காக தன்னுடைய முதுமையான நிலையிலும் போரின் இடர்ப்பாடுகளின் மத்தியிலும், தான் எழுதிய கதைகளைக் காப்பாற்றிக் கொண்டு வந்தவர் நடராஜா அவர்கள். ஒரு சாதாரண மேசன் தொழிலாளியாக இருந்து கொண்டே இலக்கியப் படைப்புகளைப் படைத்து சாதனை புரிந்த இவர் இன்றைய இளைய தலைமுறையினருக்கு நல்லதோர் வழிகாட்டியாவார்.

மிகக் கடினமான வாழ்க்கைச் சூழலுக்குள் நின்றே தன்னுடைய சமூகக் கரிசனையை வெளிப்படுத்திய இந்தப் படைப்பாளியை மதித்துப் பெருமைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன் என்றார். .

இந்த நிகழ்வில் கரைச்சிப் பிரதேச செயலர் நாகேஸ்வரன் சிறப்புரை ஆற்றினார். எழுத்தாளர் பெருமாள் கணேசன், வேல் லவன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தினர்.

நூலுக்கான வெளியீட்டுரையை வணக்கத்துக்குரிய யோசுவா அடிகளார் நிகழ்த்தினார்.

# மனிதாபிமான தினம் யாழில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனிதாபிமான தினம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள யு.என்.எச்.சி.ஆர். காரியாலயத்தில் காலை 10 மணிக்கு அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

ஈராக் தலைநகர் பாக்தாத்தில் கொல்லப்பட்ட மனிதாபிமானப் பணியாளர்களை நினைவு கூரும் முகமாக 2008 ஆண்டு தொடக்கம் வருடம் தோறும் ஆகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் ரமழான் தினத்திற்காக பிற்போடப்பட்டு அன்றைய தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இதில் யாழ்ப் பாணத்தில் உள்ள ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் மற்றும் மனிதாபிமான உதவி நிறுவ னங்கள் ஆகியவற்றின் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

இத்தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தால் விடுக்கப்பட்ட செய்திக்குறிப்பும் வாசிக்கப்பட்டது. அதில் இவ்வாண்டுக்குரிய உலக மனிதாபிமான தினமானது உலகெங்கிலும் உள்ள 100 கோடி மக்களை ஒன்று கூட்டி மிகவும் வலுவானதும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதுமான கருதுகோளை மேம்படுத்துவதற்கு வரலாற்றுச் சிறப்புமிக்க வாய்ப்பை வழங்குகிறது. இந்தக் கருதுகோள் "மக்களே மக்களுக்கு உதவுதல் என்பதாகும்'' கடமையின் போது உயிர்நீத்த நிலையில் இன்று நாம் அஞ்சலி செலுத்தும் நற்பணியாளர்களைக் கௌரவிக்கும், அவலங்களை எதிர்கொள்வோருக்கு விரைந்து உதவி செய்யும் மகோன்னத பணியில் ஈடுபட்டுள்ளவர்களின் முயற்சிகளைக் கொண்டாடுவதற்கும் இதுவே சிறந்த வழியாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (02)

# மிதிவண்டிகள் தரிப்பால் பெரும் இடநெருக்கடி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையின் முன்பகுதியில் சந்தைக்கு வருவோர் தங்கள் மிதிவண்டிகளைத் தரித்து வைப்பதால், மிகுந்த இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

மிதிவண்டிகள் மற்றும் மோட்டார் வண்டிகள் எனப் பல தரப்பட்ட வாகனங்களைச் சந்தையின் உட்புற முன்பகுதியில் மிக நெருக்கமாக நிறுத்துவதால், அவற்றை மீள எடுக்கவரும் வாகன உரிமையாளர்களுக்கிடையில் அநாவசியமான சண்டை சச்சரவு ஏற்படலாமென பொது மக்களில் ஒருசாரர் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இவ்விடயத்தை புதுக்குடியிருப்பு பிரதேசசபை கவனத்திற்கொண்டு மிதிவண்டிகளை இன்னொரு இடத்தில் தரித்து வைப்பதற்கு, சந்தையின் உட்பகுதியில் ஒரு இடம் ஒதுக்கிக்கொடுக்க வேண்டுமென பொதுமக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (138)

# பாரதிபுரத்தில் ஆயுதங்கள் மீட்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பாரதிபுரம் பகுதியில் ஒருதொகுதி ஆயுதங்களை புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் பொலிஸார் மீட்டிருப்பதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் கிணறொன்றிலிருந்தே மேற்படி ஆயுதங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

இவற்றில் கலிபர் துப்பாக்கிக்கான ரவைகளும், குண்டுகளும் இடம்பெற்றிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரே இந்த ஆயுதங்களை மீட்டிருக்கின்றனர்.

இந்த ஆயுதங்கள் மீட்புச் சம்பவத்தையடுத்து, குறித்த பகுதியில் பதற்றமான நிலை நீடித்தது.

# ஆன்மீக சொற்பொழிவு


(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆசிரம மண்டபத்தில் உற்சவ தினங்களில் ஆன்மீகச் சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

இச் சொற்பொழிவு வரிசையில் இன்று முற்பகல் 10.00 மணியளவில் "தேவி பாக்வதம்" எனும் தலைப்பில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் சொற்பொழிவாற்ற உள்ளார்.

சந்நிதி ஆலய முன்றலில் நடைபெறும் சொற்பொழிவு நிகழ்வில் இன்று மாலை 4.00 மணிக்கு 'திருவருள் மாயம்' என்ற தலைப்பில் சைவப் புலவர் ஆ.தங்கமயில் சொற்பொழிவாற்றவுள்ளார். (116)

## தெல்லிப்பழை துர்க்கையம்மனுக்கு இன்று 7 ஆம் திருவிழா



### சக்தி நீயே!

குங்குமத்தில் குடியிருக்கும் குங்கும சக்தி
மஞ்சளிலே நிறைந்திருக்கும் மங்கள சக்தி
வேப்பிலையில் மறைந்திருக்கும் மூலிகை சக்தி
வேண்டுதலைத் தீர்க்க வரும் தாயெனும் சக்தி நீயே!






## செல்வச்சந்நிதி முருகனுக்கு இன்று 8 ஆம் திருவிழா



*தொண்டைமானாறு தானருள் சந்நிதி வேலா!*

மாவை, நல்லூர், சந்நிதி தோறும்
மாதவக் கந்தன் கோட்டம்;
பாவை வள்ளி, தேவயானை யொடு
பார்வதி மைந்தன் நாட்டம்!

காமத்து கதிரவன் கதிர்காம கந்தன்
கதிர்வே லாயுத மென்றும்;
நாமத்தில் பலவாக நாடியே நம்மை
நாடெலாம் உய்விக்கும் குன்றம்!

- கவிஞர்பாலி -




உற்சாகமாக இருக்கத் தொடங்குவதுதான் வெற்றிகரமான வாழ்க்கை வாழத் தொடங்குவதற்கான முதல் அறிகுறி. - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## இருக்கும் இடத்தைவிட்டு இல்லாதது தேடி...

கடந்த செவ்வாயன்று கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் அமையப்பெற்றுள்ள பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கு விவசாயபீடத்தை விரைவில் இயங்க வைப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொண்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. அத்தோடு ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டவாறு கிளிநொச்சியில் பொறியியல் பீடத்தையும் தொடங்குவதற்கான நடவடிக்கைகளையும் அமைச்சர் முடுக்கி விட்டுள்ளார்.

எந்த நாட்டுப் பல்கலைக்கழகங்களாயினும் சரி, இந்தியாவிலும் சரி, இலங்கையிலும் பேராதனைப் பல்கலைக்கழகம் போன்றன மிகப்பெரிய நிலப்பரப்பில் ஒரு தனிநகரம் போலவே அமைந்திருப்பதற்குக் காரணங்களுண்டு. பல கலைகளையும் கற்பதற்குப் பல இடங்களிலிருந்தும் வந்து கூடும் மாணவர்கள் ஒன்றாக வாழ்ந்திருந்து கற்றுத்தேறும் கல்விச்சாலையாக அது அமையவேண்டும். பல்கலைக்கழகம் என்பது சிறுவயதினருக்கான பாடசாலை போல ஒரு கூடம் அல்ல, விரிவான கலைகள் பயிலும் நகரம்.

உலகு தழுவியதாக எண்ணங்களையும் திறமைகளையும் விரிவடைய வைக்க வேண்டியதாக கல்விதரும் சூழலும் விரிந்திருக்க வேண்டும். பட்டிக்குள் அடைத்து வைத்துச் சொல்லித் தருவது போன்ற மூச்சுமுட்டும் சூழலை நாம் முடிந்தவரை விலக்க வேண்டும் என்பதில் மறுகருத்து இருக்கமுடியாது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இடப்பரப்பு இதற்குமேல் விரிவாக்கம் செய்யப்பட முடியாதது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

ஆகவே கல்வியிலும் மணவர்களிலும் தேசத்தின் வளர்ச்சிகளிலும் அக்கறையுடைய எவரும் விவசாய, பொறியியல் பீடங்கள் அமையப்போகும் இடமான கிளிநொச்சி அறிவியல் நகரைச் சென்று பார்த்திருப்பர் என்பதில் சந்தேகமில்லை. 450 ஏக்கர் பரப்பளவில் விவசாயப் பண்ணையோடு சேர்ந்த விவசாயப் பல்கலைக்கழக பீடத்திற்கான இடம் ஏற்கனவே ஒருபகுதிக் கட்டடங்களோடு அங்கு இருப்பதை வரப்பிரசாதமாகவே கொள்ள வேண்டும்.

ஏற்கனவே அங்கு இருக்கின்ற, ஐந்து குளங்களுக்கு மத்தியில் கற்றலுக்குரிய சூழ்நிலையைத் தரும் சோலையாக மாறக்கூடிய அந்த இடத்தின் விசாலம், இப்படியொரு இடத்தை கைநழுவ விட்டுவிடக் கூடாது என்றே ஒவ்வொருவர் மனதிலும் தோன்ற வைக்கும். கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரியும் அந்த நிலப்பரப்பில் மாணவர்கள் உலவுவதும் கல்வி நகராக அது இயங்கும் தோற்றமும் கற்பனையில் விரிய மனதில் மகிழ்ச்சி எழும்.

துரதிர்ஷ்டவசமாக நம்மில் பலர் இன்னும் குறுகலாகவும், சொந்த நலன்களோடும் மட்டுமே சிந்திப்பவர்களாக இருக்கிறோம் என்பது வருத்தத்திற்குரியதுதான். எங்கள் வீட்டுப் படலைகளைத் தாண்டி வெளியே செல்ல நாம் தயாரில்லை. எல்லாம் எமது வளவுக்கருகிலேயே இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். 'சுத்திச் சுத்திச் சுப்பற்ற கொல்லை' என்பதை நாம் நமது வாழ்க்கை மந்திரமாகவே மாற்றிவிட்டோமோ என்று தோன்றுகிறது.

நமக்கென விரிந்து பரந்து கிடக்கும் இடங்களுக்குச் செல்ல நாம் தயாரில்லை என்றால், அந்த இடங்களிற்கு மற்றவர்கள் சென்று தங்குவதை எப்படித் தடுக்க முடியும்? இயற்கையும் வெற்றிடத்தை விரும்பாது என்கிறபோது, நாம் புறக்கணித்த இடங்களில் மற்றவர்கள் சூழ்வதும் தவிர்க்க முடியாததே. நாம் வேண்டாம் என்று விட்டுவிடுவதை, இல்லாதவர்கள் எடுத்துக் கொள்ளவே செய்வர். அப்போது நாம் வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கத்துவதை எல்லாம் வெற்றுப் பிலாக்கணம் என்றே உலகம் பார்த்துவிட்டு அப்பால் போகும். இழப்பு நமக்குத்தான்.

- ஆசிரியர்

# இலங்கை மருத்துவ கவுன்சில் மிரட்டல்களுக்கு அஞ்சாது

(கொழும்பு)

இலங்கை மருத்துவ கவுன்ஸிலின் சிரேஷ்ட அங்கத்தவர் டாக்டர் லலந்த ரணசிங்க மீதான கைக்குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து இலங்கை மருத்துவ கவுன்ஸில், தான் இந்த மிரட்டல்களுக்கு பயப்படப் போவதில்லை எனக் கூறியுள்ளது.

இது தனியொரு சம்பவம் அல்ல. இலங்கை மருத்துவ கவுன்ஸிலின் பல அங்கத்தவர்கள் குண்டுத் தாக்குதல், துப்பாக்கிச்சூடு, அடித்தல் போன்ற பலவகை பயமுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளனர் என மருத்துவ கவுன்ஸில் அங்கத்தவர் சரத் காமினி டி சில்வா கூறினார்.

இலங்கை மருத்துவ கவுன்ஸில் அதன் விதிகளை மாற்ற வேண்டுமென சிலர் எதிர்பார்க்கின்றனர். ஆனால், நாம் எமது கொள்கைகளை தொடர்ந்தும் கடைப்பிடிப்போம் என டி சில்வா கூறினார்.

இலங்கை மருத்துவ கவுன்ஸிலின் பதிவாளரான டாக்டர் என்.ஜே.நோனிஸ், இலங்கை மருத்துவ கவுன்ஸில் தற்போது மூன்று முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக கூறினார்.

வெளிநாட்டில் வைத்திய பட்டம் பெற்றோரை இலங்கையில் கடமையாற்ற அனுமதிக்கும் பரீட்சை, இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள், வெளிநாட்டு வைத்தியர்களை இலங்கையில் கடமை புரிய அனுமதித்தல் என்பவையே இந்தப் பிரச்சினைகள் என அவர் கூறினார்.

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி இன்னும் இலங்கை மருத்துவக் கவுன்ஸிலின் தராதரங்களைப் பூர்த்திசெய்யவில்லை. இங்கு விரிவுரையாளர்கள் பற்றாக்குறை உள்ளது. அத்துடன், இன்னும் போதனா வைத்தியசாலையும் அமைக்கப்படவில்லை என ஸ்ரீஜயவர்தனபுர மருத்துவ பீடாதிபதி ஜயந்த ஜயவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளுக்காக நடத்தப்படும் பரீட்சையை மாற்றியமைக்க வேண்டுமென்பதற்காக இலங்கை மருத்துவ கவுன்ஸில் மீது பலத்த அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடாதிபதி ஹர்ஷ செனவிரத்ன தெரிவித்தார்.

சட்டங்களைப் பிரயோகித்து தரமான மருத்துவ வாண்மையாளர்களை உருவாக்கவே நாம் உள்ளோம். நாங்கள் அழுத்தங்களுக்கு பணியப்போவதில்லை என அவர் கூறினார்.

# சுனாமி வீட்டுத்திட்ட கல், மண்ணை தந்துதவுமாறு மக்கள் கோரிக்கை

(மருதங்கேணி)

வத்திராயன் கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டவென கடந்த 2005 ஆம் ஆண்டு சொலிடார் நிறுவனத்தால் பறிக்கப்பட்ட கற்கள் மற்றும் மண் என்பன களவாடப்படுவதாகவும், எனவே இவ்வாறு நாளாந்தம் களவாடப்படும் கல், மண்ணினை தமக்கு தந்துதவுமாறு வீட்டுத்திட்டத்திற்கு தெரிவாகியுள்ள பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கிராமத்தின் அரசடி வீதிப்பகுதியில் அத்திவாரக்கற்கள் மற்றும் பாலியாற்று மணல் என்பன பெருமளவில் பறிக்கப்பட்டிருந்தன. எனினும் பின்னர் நிலவிய அசாதாரண நிலைமை கார்ணமாக மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்ததால் வீட்டுத்திட்டமும் கைவிடப்பட்டது.

தற்போது மக்கள் மீளவும் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்ந்த நிலையில் முன்னர் பறிக்கப்பட்ட கல், மணல் என்பன இரவோடிரவாக நாளாந்தம் களவாடப்படுகின்றன.

எனவே எஞ்சியிருக்கும் கல், மண்ணையாவது வீட்டுத்திட்டதிற்கு தெரிவாகிய தமக்கு பிரித்து தருமாறு பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த விடயத்தில் மருதங்கேணி உதவி அரச அதிபர் கூடிய கவனமெடுக்க வேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (38)

# இலங்கைக்கு வருகிறது 'சைனா ரவுண்' இரவுச்சந்தை

(கொழும்பு)

மலேசியா, சிங்கப்பூர், ஹொங்கொங் ஆகிய நாடுகளில் உள்ளது போன்று இலங்கையிலும் சைனா ரவுண் [China Town] என்ற பெயரில் இரவுச்சந்தை ஆரம்பிக்கப்படவுள்ளது.

அம்பாந்தோட்டையில் அமைக்கப்படவுள்ள இந்த சைனா ரவுண் சந்தை, காலை 9 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை - இரவு பகலாக செயற்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த சைனா ரவுண் சந்தையில் வர்த்தகத்தை மேற்கொள்ள ஆயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மத்தால விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், உத்தேச தொழில்நுட்ப பூங்கா ஆகியவற்றில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் அந்தப் பகுதி மக்கள் இந்தச் சந்தையால் அதிகம் பயனடைவார்கள் என்றும் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

# அருங்காட்சியக கொள்ளை; மேலும் ஒருவர் கைது

(கொழும்பு)

தேசிய அருங்காட்சியகத்தில் புராதன பொருட்கள் திருடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட இவர் மாளிகாவத்தை பகுதியிலுள்ள நகைக் கடையொன்றின் உரிமையாளர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

குறித்த நபர் திருடப்பட்ட பொருட்களில் இருந்த தங்கம் மற்றும் வெள்ளி ஆகியவற்றை விற்பனை செய்துள்ளமை தெரியவந்துள்ளது. அத்துடன் சந்தேகநபரிடம் இருந்து 212 கிராம் தங்கமும், 513 கிராம் வெள்ளியும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட தங்கம் மற்றும் வெள்ளி ஆகியன கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தால் வடமராட்சி கிழக்கு மக்களுக்கு வீட்டுத்திட்டம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராமங்களில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்காக சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம் 500 வீடுகளை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.


ஒவ்வொன்றும் 5 இலட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியான வகையில் இந்த வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதன்படி வத்திராயனில் 125 வீடுகளும், உடுத்துறையில் 250 வீடுகளும், ஆழியவளையில் 125 வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

இந்த வீடுகளை பெற்றுக் கொள்ளவுள்ள பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் நேற்றைய தினம் குறித்த நிறுவனத்தின் அதிகாரிகளினால் மூன்று கிராமங்களிலும் வைத்து பயனாளிகளுடனான வீட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

பயனாளிகள் வீடுகளைக் கட்டுவதற்கான நிதி சமுர்த்தி வங்கிகளூடாக வைப்பிலிடப்பட்டு வழங்கப்படும். இந்த வீடுகள் இவ்வருட இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது. (38)

எமது மக்களின் கடின உழைப்பின் ஊடான தனித்துவத்தை வெளிப்படுத்துவதற்கு அடித்தளமாக இருந்து வரும் குடா நாட்டின் விவசாயத் துறை இன்று தனது வகிபங்கை படிப்படியாக இழந்து வரும் ஒரு நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது.

இதற்கு பிரதான காரணமாக போருக்குப் பிந்திய நிலைமைகளால் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் குறிப்பிடப்படுகின்ற போதும் குறிப்பாக இத்துறை சார்ந்த அமைப்பு ரீதியான செயற்பாடுகளில் ஏற்பட்டிருக்கின்ற தளர்வும் விவசாயிகளின் குறிப்பான நிலைமைகளில் இருந்து தேவையான திட்டங்களை இனங்காண முடியாதிருக்கின்ற தற்போதைய நிலைமைகளுமே பிரதான காரணம் என்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.



# தனித்துவத்தை இழந்து செல்லும் குடா நாட்டின் விவசாயத்துறை

**விவசாய நிலங்கள் வேறு தேவைகளுக்காக ஒதுக்கப்படுவதைத் தவிர்த்தல், குறித்த உற்பத்திக்காகப் பொருத்தமான உதவிகளைப் பெற வகை செய்தல், நியாய விலைகளில் இடைத்தர உபகரணங்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், பரந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் போக்குவரத்துக்கான ஏற்பாடு, இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புக்களுக்கான இழப்புகளைப் பெற்றுக் கொடுத்தல், அரச நிறுவனங்களின் சீரான செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை வழங்கி உதவுதல் என்பவை யாவும் விவசாயிகளின் தொழில் மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு ரீதியான செயற்பாடுகளாகும்.**

**- சாலையூரான்**

இதில் விசேடமாக நடைமுறையில் இருந்து வந்த குடாநாட்டு விவசாயிகளின் பணப்பயிர் உற்பத்திக்கான சந்தை வாய்ப்புகள் நாடு தழுவிய ரீதியில் நிச்சயமற்றதொரு நிலைக்குள் தள்ளப்பட்டிருப்பதும் மற்றொரு பிரதான காரணமாகும்.

உற்பத்தி செலவினங்களைக் குறைக்கவும், கூடுதல் வருமானத்தைப்பெற்றுக் கொள்வதற்குமான ஒரு மார்க்கமாக விவசாயிகள் தம் உற்பத்திகளைக் கூடுதலாக மேற்கொள்வதை ஒரு உபாயமாகக் கையாண்டு வரும் நிலையில் தற்சமயம் இதற்கான பரந்த சந்தை வாய்ப்புகள் குழம்பியிருப்பது அவர்களின் கூடுதல் முயற்சிகளைப் பெரிதும் பாதித்திருக்கிறது.

இதில் விவசாயிகள் தமது உற்பத்தி முயற்சிகளை திறம்பட முன்னெடுக்கவென தமக்கான அமைப்புகளில் கூட்டாக பரந்துபட்டு அவற்றைக் கையாள முடியாத ஒரு நிலைமை இருப்பதும் இவ் விடத்தில் கவனத்திற் குரியது.

நாட்டில் விடுதலைக்கான போர் வலுவடைந்திருந்த ஒரு சூழலில் தமக்கான தொழில் முயற்சிகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அமைப்பு ரீதியாக அணுகுவது அரசுக்கு எதிரான செயற்பாடாக நோக்கும் ஒரு சூழல் வலுவடைந்திருந்த நிலையில் தமது உற்பத்தி முயற்சிகள் சார்ந்து கூட்டாக செயற்படுவது நீண்ட காலமாக விவசாயிகளால் புறக்கணிக்கப்பட்டு வந்தமையும் விவசாயத்துறையின் பின்னடைவுக்குப் பிரதான காரணமாகும்.

இதன்விளைவு சமகாலத்தில் விவசாயிகள் தமது தொழில் மேம்பாட்டிற்காக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து பிரதேசம் தழுவி கூட்டான தீர்மானங்கள் எதனையும் அரசுத் தலைவர்களை நோக்கியோ அன்றி குறித்த திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலமாகவோ கூட்டாக வலியுறுத்த முடியாத அளவுக்கு இந்த அமைப்புகள் வலுவிழந்து இருப்பதாகும்.

இதில் எமது விவசாயிகளுக்கான கூட்டுறவுச் செயற்பாடுகள் கவனத்திற்குரியன. இதற்கென தனியான திணைக்களங்களும் பொறுப்பான அதிகாரிகளும் நியமிக்கப்பட்டிருக்கும் நிலையில் இவ்விவசாயிகளுக்காக கிராமமட்டத்தில் செயற்பட வேண்டிய சட்டரீதியான அமைப்புகள் வலுவிழந்திருப்பது கவலைதரும் செய்தியாகும்.

குறிப்பாக தமது விவசாய நடவடிக்கைகள் குறித்த பிரச்சினைகளை முன்வைப்பதற்கான ஏற்பாடாக இந்த அமைப்புகளில் தமது அங்கத்துவத்தினை கொண்டிருக்காமையும், கூட்டங்களில் கலந்து கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதில் தம்மை முற்றாக விலக்கிக் கொண்டிருப்பதும் அவர்களது பிரச்சினைகளை சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு ஈடுத்துக் கூறுவதில் தடங்கல்களை ஏற்படுத்தியுள்ளன.

விவசாயிகளுக்கான இந்த உள்ளூர் அமைப்புகளின் பின்னடைவான நிலை இத்துறை சார்ந்த அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்களின் சீரான செயற்பாட்டை முறையாக முன்னெடுப்பதற்கான தூண்டுதல் மற்றும் சிரத்தைகளை வலுவிழக்கச் செய்திருக்கின்றன.

எப்போதும் குறிப்பிட்டதொரு துறையின் மேம்பாடும் ஸ்திரத்தன்மையும் என்பது அத்துறை சார்ந்த மக்களின் அமைப்பு ரீதியான செயற்பாடுகளுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டிருப்பது ஒரு பொது விதியாகும். இந்த நிலையில் யாழ்.குடாநாடு என்ற ரீதியில் நோக்கும் போது விவசாயிகளது பொது அமைப்புகள் எவ்வாறான நிலையில் இருக்கின்றது என்பது இவ்விடத்தில் கவனத்திற்குரிய விடயமாகும்.

பிந்தியதாக விவசாயிகள் எதிர்கொள்ளும் தலையாய பிரச்சினைகள் என்ற வகையில் தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதில் வெளிமாவட்ட சந்தைகளால் மட்டுமன்றி உள்ளூர் சந்தைகளில் இடைத்தரகர்களால் எதிர்கொள்ளும் நெருக்கடி என்பது தீராப் பிரச்சினையாகவே எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது.

இதில் விவசாயிகள் தமக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு இடைத்தரகர்கள் தமக்கு எவ்வாறு கூடுதல் இலாபத்தை ஈட்டிக் கொள்ள முடியும் என்ற விடயமே முன்னுரிமைப்படுத்தப்படுவதை எமது உள்ளூர் சந்தைகளில் வெளிப்படையாக அவதானிக்க முடியும்.

இதில் தாம் கேட்கும் விலைக்கே உற்பத்திகளைத் தரவேண்டும் என்பதற்காக இடைத்தரகர்கள் கூட்டாகச் சேர்ந்து முன்கூட்டியே விலைகளைத் திட்டமிடுவதும் அந்த விலைக்காக விவசாயிகளை நிர்ப்பந்திப்பதும் இச் சந்தைகளின் அன்றாட நிலைமைகளாக அவதானிக்கப்பட்டுள்ளன.

இது ஒருபுறமிருக்க வெளிமாவட்டங்களில் இருந்து எதிர்பாராத விதமாக கூடுதலான அளவில் உற்பத்திகள் உள்ளூர் சந்தைகளை நோக்கி வருவது எமது விவசாயிகளைப் பெரிதும் பாதிப்பதாக இருக்கிறது.

உற்பத்திக்கான இடைத்தர உபகரணங்களின் விலை மற்றும் எரிபொருட்களின் அதிகரித்த விலைகளால் பாதிப்புக்குள்ளாகியிருக்கும் விவசாயிகள் குறிப்பாக தென்னிலங்கை உற்பத்திகளால் எதிர்பாராத விலைவீழ்ச்சியைச் சந்திக்கும் இந்த நெருக்கடி பற்றி இத்துறைசார்ந்த எந்த நிறுவனங்களோ அமைப்புகளோ கண்டுகொள்வதாக இல்லை.

இவ்விடத்தில் விவசாயிகளுக்கான அமைப்புகளது செயற்பாடுகள் பிரதான கவனத்திற்குரியனவாகின்றன. சந்தையில் தமது உற்பத்திக்கான குறைந்தபட்ச விலையைத் தீர்மானிப்பது, கூடுதல் உற்பத்திகளைக் களஞ்சியப்படுத்தல், புதிய சந்தைகளை இனங்காண்பதற்கான முயற்சிகள்,வெளிமாவட்ட உற்பத்திகளால் உருவாகும் பாதிப்பைத் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான விவசாய உற்பத்திகளை இனங்கண்டு ஊக்குவித்தல் போன்ற விடயங்கள் யாவும் விவசாயிகளின் அமைப்பு ரீதியான செயற்பாடுகளுடன் பிரதானமாக தொடர்புபட்டிருக்கிறது.

விவசாய நிலங்கள் வேறுதேவைகளுக்காக ஒதுக்கப்படுவதைத் தவிர்த்தல், குறித்த உற்பத்திக்காகப் பொருத்தமான உதவிகளைப் பெற வகை செய்தல்,நியாய விலைகளில் இடைத்தர உபகரணங்களை பெறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல், பரந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், போக்குவரத்துக்கான ஏற்பாடு, இயற்கை அனர்த்தங்களின் பாதிப்புக்களுக்கான இழப்புகளைப் பெற்றுக் கொடுத்தல், அரச நிறுவனங்களின் சீரான செயற்பாட்டுக்கான ஆலோசனைகளை வழங்கி உதவுதல் என்பவை யாவும் விவசாயிகளின் தொழில் மற்றும் மேம்பாட்டிற்கான அமைப்பு ரீதியான செயற்பாடுகளாகும்.

குடாநாட்டின் தற்போதைய அரசியல் சூழலில் தமது விவசாய முயற்சிகளை மேம்படுத்திக் கொள்வதற்காக இந்த உதவிகளைக் குறைந்தளவில் அல்லது மட்டுப்படுத்திய அளவில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அமைப்புக்களிடம் இருந்து பெறுவதற்கான வாய்ப்புக்களே தற்போது காணப்படுகின்றன.

இந்த நிலைமை காரணமாகப் போரின் முடிவுக்குப்பிந்திய சமகால சூழலில் அரசின் ஊடாகக் கிடைக்கும் உதவிகளைப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக முன்னுரிமைப் படுத்தும் முயற்சிகளும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றன.

(17ஆம் பக்கம் பார்க்க)

# கல்வியை பாதுகாக்கும் போராட்டத்தின் பின்னணியில் எந்த சக்திகளுமில்லை

## கூறுகிறார் ரில்வின் சில்வா



(கொழும்பு)

கல்வியைப் பாதுகாப்பதற்காக நடத்தப்பட்டு வரும் போராட்டங்களின் பின்னணியில், எந்தச் சக்திகளும் இல்லை என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். எனினும் கல்வியை அழிக்கும் அரசாங்கத்தின் அமைச்சர்களின் பின்னணியில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியம் போன்ற வியாபாரிகள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் தற்போது, சகல அரச பல்கலைக்கழகங்களையும் மூடியுள்ளது. பல்கலைக் கழகங்களை மூடும் அளவிற்கு நாட்டில் பிரச்சினைகள் ஏற்படவில்லை.

பல்கலைக்கழகங்களை நடத்த சந்தர்ப்பம் உள்ளது. பாரதூரமான பிரச்சினைகள் இல்லாத சூழ்நிலையிலேயே அரசாங்கம் இவ்வாறு பல்கலைக் கழகங்களை மூடியுள்ளது.

உயர்கல்வி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி தன்னிச்சையாக அவர் பல்கலைக்கழங்களை மூடியுள்ளார்.

பல்கலைக் கழகங்களை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்த சந்தர்ப்பத்தில் கல்வி சம்பந்தமாக பல பிரச்சினைகள் இருக்கின்றன.

உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களின் இஸட் புள்ளிகளில் அரசாங்கம் தவறு செய்ததால், பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடியாது மாணவர்கள் நியாயம் கேட்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரசாங்கம் அந்தத் தவறைத் திருத்த வேண்டியுள்ளது. மறுபுறம் மொத்த தேசிய வருமானத்தில் கல்வித்துறைக்காக 6 வீதத்தை ஒதுக்குமாறு கோரி, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் போராடி வருகின்றனர்.

அரசாங்கம் தற்போது செய்ய வேண்டியது பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாகும்.

தீர்வுகளை வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கம் மாறான தீர்மானங்களை எடுத்து வருகிறது. தீர்வு வழங்குவதற்குப் பதிலாக பல்கலைக்கழகங்களை மூடியுள்ளது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையானது வயிற்று வலி ஏற்பட்டவருக்கு கழிவறை கதவை மூடுவது போன்ற நடவடிக்கையாகும்.

மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்குப் பதிலாக பல்கலைக்கழகங்களை மூடுவதால், பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படாது. அரசாங்கம் இப்படியான தீர்மானங்களை எடுத்து கல்வித் துறையை அழித்து வருகிறது எனவும் ரில்வின் சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.

# தெற்கிலும் இனவாத சக்திகள்

## வருந்துகிறார் அமைச்சர் நிமால்



(கொழும்பு)

வடக்கைப் போன்றே தெற்கிலும் இனவாத சக்திகள் இயங்குவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்காக கரிசனையுடன் குரல் கொடுப்பதாக காண்பித்துக் கொள்ளும் ஜே.வி.பி. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கப் போவதில்லை என அறிவித்துள்ளது.

ஜே.வி.பி. வெறுமனே முதலைக் கண்ணீர் வடிக்கினறது. தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக அமைந்துள்ளது.

பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமாயின் நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமர்வுகளில் பங்கேற்குமாறு அழைக்கின்றோம்.

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் பிரச்சினைகள் இருந்தால் அது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தப்பட முடியும்.

எம்மிடையே காணப்படும் இடைவெளிகளைக் குறைப்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

இந்தப் பிரச்சினைகளை சர்வதேச மயப்படுத்தாமல் உள்நாட்டு ரீதியில் தீர்வு காணப்பட வேண்டியது அவசியமானது என நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

# தேர்தலுக்காக இனவாதம்; வேண்டாம் என்கிறது அரசு



(கொழும்பு)

தேர்தலுக்காக இனவாதத்தைத் தூண்டி அரசியல் செய்வதைக் கைவிடுமாறு அரசியல் கட்சிகளிடம் அரசாங்கம் கோரியுள்ளது.

எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஆளும் கட்சியில் உள்ள பங்காளிக் கட்சியாக இருந்தாலும் இனவாதம் பேசி தேர்தலில் வெற்றிபெற முயலும் கட்சிகளை மக்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

30 வருடம் நீடித்த புண் குணமடைந்துள்ள நிலையில், அதனைத் தோண்டிக் காயப்படுத்த அரசியல் கட்சிகள் முயலக் கூடாது எனவும், தேர்தல் முடிவடைந்த பின்னரும் இதன் பாதிப்பு தொடரும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு தேர்தலில் இனவாதத்தைத் தூண்டி வெற்றிபெற சில கட்சிகள் முயன்றுள்ளன. தேர்தல் முடிவுகள் எவ்வாக இருநதாலும் தேர்தலின் பின்னர் இதன் பாதிப்புத் தொடரும்.

இனவாதத்தைத் தூண்டுவதன் மூலமே இலகுவாக வாக்குத் திரட்ட முடியும் என இக்கட்சிகள் அறிந்து வைத்துள்ளன. ஆனால் நாட்டு மக்களின் நல்லுறவும் ஒற்றுமையும் மிக முக்கியமாகும். சிங்கள இனவாதமாக இருந்தாலும் தமிழ் இனவாதமாக இருந்தாலும் அத்தகைய கட்சிகளை மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும்.

சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புள்ள அரசியல்வாதிகளை எமது கட்சி பாதுகாக்காது. தராதரம் பாராது அத்தகையவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். ஐ.தே.க. ஆட்சியில் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஜனாதிபதியால் மன்னிப்பு வழங்கப்பட்டு சமாதான நீதவான் பதவியும் வழங்கப்பட்டது எனத் தெரிவித்தார்.

அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கூறுகையில், எதிர்க்கட்சிகள் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளன. ஐ.ம.சு.மு. தவிர வேறு மாற்று வழி கிடையாது. எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களை மக்கள் ஏற்கவில்லை என தெரிவித்துள்ளார்.

# சமுர்த்தி கொடுப்பனவை இல்லாதொழிக்க முயற்சி

(கொழும்பு)

சமுர்த்தி திட்டக் கொடுபனவுகளை இல்லாதொழிக்க அரசாங்கம் முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

திவிநெகும எனும் திட்டத்தின் கீழ் 900 மில்லியன ரூபா சமுர்த்திக் கொடுப்பனவை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

திவிநெகும திட்டத்தின் மூலம் சமுர்த்திப் பயனாளிகள் பாரியளவில் பாதிக் கப்படுவர்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமையவே சமுர்த்தி கொடுப்பனவை இரத்துச் செய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது.

திவிநெகும திட்டத்தின் பிரசாரப் பணிகளுக்காக இதுவரையில் 36 இலட்ச ரூபா செலவிடப்பட்டுள்ளது என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.



# ரயிலில் பயணம் செய்த வேளை பிரான்ஸ் பெண்மீது வல்லுறவு

(கொழும்பு)

கொழும்புக்கும், பதுளைக்கும் இடையே சேவையில் ஈடுபடும் பொடிமெனிகே ரயிலில் பயணம் செய்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது.

குறித்த பிரான்ஸ் நாட்டுப் பெண், பதுளை செல்லும் நோக்கில் வேறு சிலருடன் அப்புத்தளை ரயில் நிலையத்திலிருந்து பொடிமெனிகே ரயிலில் ஏறியுள்ளார்.

இந்நிலையில், ரயிலில் உள்ள உணவகத்தில் பணி புரியும் ஊழியர், மெனபானங்களை விற்பனை செய்ய எடுத்துச் செல்லும் போது, பிரான்ஸ் பெண்ணுடன் பழகியுள்ளதுடன் அவரை வல்லுறவுறக்கு உட்படுத்தியுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அந்த ஊழியரைப் ரயில்வே திணைக்கள பாதுகாப்பு அதிகாரிகள் கைதுசெய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

சந்தேக நபர் பேருவளை பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழரசுக் கட்சியினர் மகான்களா? இல்லை என்கிறார் பிள்ளையான்



(கொழும்பு)

தமிழரசுக் கட்சியினர் ஒன்றும் மகான்களல்ல. மகான்களின் பெயர்களை விளம்பரப் பலகைகளாக்கி வியாபாரம் செய்யும் மிகக் கேவலமான அரசியல்வாதிகள் கூட்டமே அவர்கள் என்று கிழக்கு மாகாணசபையின் முன்னாள் முதல்வர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

நாவிதன் வெளியில் அண்மையில் இடம் பெற்ற அரசியல் கூட்டமொன்றில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

எம் மக்களை ஏமாற்றுவது எப்படி என்கின்ற வித்தையினை மாத்திரம் நன்கு பயின்றுள்ள கூட்டமைப்பு தொடர்ந்தும் அவற்றினை எம் மக்கள் மீது பிரயோகித்து வருகின்றது.

அந்த வகையில்- அம்பாறை மக்களது வாக்குகளையும் வீணடித்து கிடைக்கின்ற சந்தர்ப்பத்தினைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தலைமறைவாகி விடுவதே அவர்களது நோக்கம்.

தம்மால் எதனையும் சாதிக்க இயலாது என்று தெரிந்தும் விதண்டா வாதத்திற்கே அவர்கள் இத் தேர்தலில் போட்டியிடுகினறனர்.

பிள்ளையானை வீழ்த்தப போகின்றோம் எனக் கூறி ஒட்டுமொத்த கிழக்குத் தமிழரது வாழ்விலும் விஷப் பரீட்சை வைத்து விளையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆனாலும் எமது மக்களும் நாமும் நிச்சயமாகத் தோற்கப் போவது கிடையாது. மேலாதிக்க சிந்தனையாளர்களான இவர்களது சுயரூபத்தினை நாம் உணந்து கொண்டது போல எம் மக்களும் இன்று உணர்ந்திருக்கின்றனர்.

அரசியல் ரீதியான தெளிவு நிலை இப்போது தான் மெல்ல மெல்ல வெளிச்சமடைந்து வருகின்றது. எமது சமூகத்தினைச் சுற்றியுள்ள மாய வேலியினை நிச்சயம் நாம் உடைத்தெறிவோம் என்று கூறினார்.

# பத்து வருடத்திற்கு முன்னான வாகனங்கள் ஒப்படைக்கவில்லை

(கொழும்பு)

வீதி அபிவிருத்தி அதிகார சபையிலிருந்து அமைச்சர் ஒருவரால் பெறப்பட்ட 7 வாகனங்கள் 10 வருடங்களாகியும் திருப்பிக்கொடுக்கப்படவில்லை என கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2010 இறுதிவரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 95 ஊழியர்கள், வீதி அபிவிருத்தி அமைச்சில் பணியாற்றுவதற்கு அனுப்பப்பட்டனர். ஆனால் மேற்படி அதிகார சபையிலிருந்து அவர்களுக்குரிய சம்பளமாக 66.64 மில்லியன் ரூபா வழங்கப்பட்டன என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐதே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கேள்வி எழுபபினார். 10 வருடங்களாக காணாமற்போன 7 வாகனங்களுக்கு என்ன நடந்தது என அவர் கேள்வி எழுப்பினார்.

இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து பதிலளிப்பதாக வீதி அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

# யாழில் கல்வி நிலை வீழ்ச்சிக்கு கிரகித்தல் இன்மையே காரணம்

## பருத்தித்துறை பிரதேச சபை உப தவிசாளர் மா.லோகசிங்கம்

(பருத்தித்துறை)

எந்தவொரு நடவடிக்கையும் கல்வியில் இருந்துதான் ஆரம்பிக்கிறது. இதேபோல் அவற்றின் நிறைவையும் கல்வியில்தான் காண்பவர்கள் யாழ்ப்பாணத்து மக்கள். ஆனாலும் இன்று யாழ்ப்பாணத்து கல்வி நிலையும் அதன் தரமும் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள மாவட்டங்களில் முன்னிலை வகித்த யாழ்ப்பாணம் இன்று கீழ் மட்டத்திற்கு கொண்டு செல்லப்பட்டமை கோடிட்டுக்காட்டப்பட வேண்டியுள்ளது என பொருளியலாளரும் பருத்தித்துறை பிரதேசசபை உபதலை வருமாகிய மா.லோகசிங்கம் தெரிவித்துள்ளார்.

வதிரி - பூவக்கரை கலைமகள முன்பள்ளி விளையாட்டு விழா கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

அரசாங்கத்தின் பொதுப் பரீட்சைகள் மூலமான அடைவு மட்டம் சில வேளைகளில் நல்ல நிலைமைகளைக் கொண்டிருந்தாலும், இன்று அடிப்படையான ஒரு விடயம் என்னவெனில், சர்வதேச மட்டத்தில் அடையப்பெற்றுக் கொண்டிருக்கின்ற அனைத்து வளர்ச்சிகளில் சிலவற்றையேனும் சராசரியாக மாணவர்கள் அடையக்கூடிய விதத்தில் மாற்றங்கள் ஏற்படவில்லையென்பதே கவலையளிக்கும் விடயமாகும்.

குறிப்பாக தாய்மொழியில் கற்பது மாணவர்களிடம் பொதிந்துள்ள இயல்பான திறமைகளை நன்கு வெளிப்படுத்த அவர்களது ஆளுமையை மேம்படுத்த உதவும் என்பதே தாய்மொழியில் நாம் கல்வி கற்பதற்குக் காரணம். ஆனாலும் இன்று அறிவின் ஆழ அகலத்தை மேம்படுத்துவதற்கு ஆங்கிலம் அவசியம் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. ஆகவே அரசாங்கம் முன்னெடுத்துள்ள மும்மொழித் திட்டத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆனாலும் இந்த உண்மையை உயர்த்துவதற்கென நாம் பெரியளவில் அலட்டிக் கொள்ளத்தேவையில்லை.

அரசாங்கம் பாடநூல்களை இலவசமாக வழங்குவது மாத்திரமல்லாமல், அந்தப் பாட நூல்களுக்குள் உள்ளடங்குவதாகவே பரீட்சைகளை நடாத்தி வருகின்றது. ஆனால் இத்தகைய பாடநூலைத் தட்டிக் கழிக்கும் மாணவர்கள் மாத்திரமல்லாமல் ஆசிரியர்களும் இருக்கின்றனர்.

ஆகவே இன்று யாழ்ப்பாண மாணவர்கள் மத்தியில் பாட நூல் சூனியம் என்பது அவர்களின் இயல்பான தன்மையைப் பாதித்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் நாம் சமூக முன்னேற்றம் என்பதை அடைந்து விட முடியாது. பல உயர்கல்வி மாணவர்களிடையே ஆங்கில அறிவு பெரிதும் குறைவடைந்திருப்பதனால் அவர்கள் வெறுமனே விரிவுரைகளில் மாத்திரம் தங்கியிருக்கும் ஒரு சாரார் என பெறுமதி குறைக்கப்பட்டு மதிக்கப்படுகின்றனர் என்றார். (12)

# செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் தரம் 1 இற்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு வடமராட்சி கல்வி வலய மேல்மாடியில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு வருகைதரும் போது ஆசிரியர்கள் தரம் 01 இல் எழுத வாசிக்கத் தெரியாத முன்பள்ளிக்கும் செல்லாத முதலாம், இரண்டாம் தவணைப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தேர்ச்சி பெற்ற மாணவர்களின் விபரம், பெற்றோர் சந்திப்பு திகதி ஆகியவற்றைக் கொண்டுவருமாறு வடமராட்சி வலயப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (109)

# முரசின் இன்றைய பலன்

(24.08.2012 - வெள்ளிக்கிழமை

நந்தன வருஷம் ஆவணி மாதம் 08 ஆம் திகதி. ஸப்தமி சித்தம் முற்பகல் 9.55 வரை. நட்சத்திரம் விசாகம் பிற்பகல் 1.53 வரை.
அட்டமி முற்பகல் 9.55 இன் மேல்.
இராகுகாலம் 10.35 - 12.05 வரை. சுபநேரம் 06.05 - 7.35 வரை. எமகண்டம் 3.05 - 4.35 வரை. குளிகன் காலம் 7.35 - 8.05 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | சந்திராட்டமம் புதுமுயற்சி கூடாது, பகைவரால் தொல்லை, வியாபாரத்தில் மந்தம். |
| ரிஷபம் | தொழில் வழி நன்மை, தேகசுகம், சுபகாரியம், மருத்துவச் செலவு குறையும். |
| மிதுனம் | சாதாரணமான நாள், புத்திரரால் மகிழ்ச்சி, அவப் பெயர் நீங்கும், கல்வியில் உயர்ச்சி. |
| கடகம் | குடும்ப வளம், இறை வழிபாடு, பெண்களால் நன்மை, கல்விச் சிறப்பு. |
| சிம்மம் | அலைச்சல், நினைத்த காரியம் நிறைவேறும், பாராட்டு வந்து சேரும், பழிப்பில் கவனம். |
| கன்னி | நற்கீர்த்தி, தானதர்மம், ஸ்தலவழிபாடு, பணப்பரிமாற்றத்தில் கவனம். |
| துலாம் | வெற்றிவாகை, காரியத்தடை, வாக்குப் பலிதம், வீண்வாய்த்தர்க்கம். |
| விருச்சிகம் | புது முயற்சிகள், உதவி தாமதமாகும், கடன்பட நேரிடும், அவதானம் தேவை. |
| தனுசு | காரிய தாமதம், கௌரவப்பதவி, பாராட்டுப் பெறுவீர், கடன் வசூலாகும். |
| மகரம் | மனச்சிக்கல், கழுதமூல நன்மை, நன் மதிப்பு குறையும், வீண் அலைச்சல். |
| கும்பம் | திடீர் செலவுகள், அரச சலுகைகள், வாக்கு வாதம் தவிர், நண்பர்கள் உதவி. |
| மீனம் | சகோதரர் உதவி, உடல்நிலை பாதிப்பு, குடும்பத்தில் மகிழ்ச்சி, சீரான வியாபாரம். |

# இராணுவ அம்புலன்ஸ் பேருந்துடன் மோதி விபத்து



(கிளிநொச்சி)

பரந்தனில் நேற்று முன்தினம் காலை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து வண்டியும் படையினரின் அம்புலன்ஸ் வண்டியும் மோதி விபத்துக்குள்ளாகின.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்து வண்டியைப் பின்புறமாக வந்த அம்புலன்ஸ் வண்டி மோதியது. இதில அம்புலன்ஸ் வண்டி பெரும் சேதத்திற்குள்ளாகியது. சாரதியும் முன் ஆசனத்தில் இருந்து பயணித்தவரும் படுகாயங்களுக்குள்ளாகினர். பேருந்தில் பயணித்த பயணிகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

இந்த விபத்தை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். அம்புலன்ஸ் வண்டி கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

## குற்றம் புரிந்தவருக்கு சமூகசேவை செய்ய உத்தரவு

(திருநெல்வேலி)

கல்வியங்காடு - ஆனந்தபுரம பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு யாழ்.சிறுவர் நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுவித்ததுடன் ஒரு வாரகாலத்துககு சமூகசேவை செய்யுமாறு யாழ்.நீதவான் மா.கணேசராசா உத்தரவிட்டார்.

இவர் திருநெல்வேலிப் பகுதியில் மதுபோதையில் நின்று வீதியால் போவோர் வருவோருக்கு இடையூறு ஏற்படுத்திக் கொண்டிருந்த போது வீதிப் போக்குவரத்துப் பொலிஸாரிடம் மாட்டிக் கொணடார். (137)

# கொடியேற்றம்

(மண்டைதீவு)

மண்டைதீவு - திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த கொடியேற்றத் திருவிழா நேற்று முன்தினம் புதன் கிழமை ஆரம்பித்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இததிருவிழா நிகழ்வின் சிறபம்சமாக 29 ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும், 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 31 ஆம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

மேலும் இத்திருவிழாவின் போது பகல் திருவிழா நிறைவுற்றதும் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது (பா)

# பொலிஸாருக்கு இடையூறு செய்த மூவர் பிணையில் விடுதலை

(திருநெல்வேலி)

நல்லூர் தீர்த்த உற்சவத்தின் போது பொலிஸாரைக் கடமையைச் செய்யவிடாது தடுத்ததாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மூவர் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்.நீதிமன்ற நீதவான் மா.கணேசராசாவினால் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மூவரும் தலா 5000 ரூபா ரொக்கப்பிணையிலும், தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஆட்பிணையிலும் செல்வதற்கு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அண்மித்ததாக பேருந்து ஒன்றை நிறுத்தியபோது பேருந்துக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டு வாக்குவாதம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் என்.ஸ்ரீகாந்தா, மு.றெமிடியஸ் ஆகியோர் ஆஜராகினர். பொலிஸ் தரப்பில் பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா ஆஜராகினார். (137)

# பனைசார் பயிற்சிநெறி செஞ்சிலுவை நிதியுதவி

(காரைநகர்)

காரைநகரில் பனைசார் உற்பத்திக்கு தென்னை பனை அபிவிருத்திச் சபையின் ஊடாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியின் கீழ் 27 மாணவர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது.

சுமார் மூன்று மாதகால பயிற்சியின் போது பயிற்சிக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 15,000 ரூபாவும், பயிற்சியாளருக்கு மாதம் ஒன்றுக்கு 10,000 ரூபாவும், பயிற்சி முழுமையாக முடிவடையும் போது 35,000 ரூபாவும் வழங்கப்படுகின்றது. இதேவேளை, இப் பயிற்சியில் ஈடுபடும் மாணவர்களுக்கு முதற்கட்டமாக 20,000 ரூபா மற்றும் 15,000 ரூபா எனப் பிரித்துக் கொடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



இந்நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், ஈ.பி.டி.பி.யின் காரைநகர் பிரதேச அமைப்பாளரும், காரைநகர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான வீ.கண்ணன் (ரஜனி), காரைநகர் பிரதேச செயலக உத்தியோகத்தர் எஸ்.பிரதீபன் மற்றும் பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.







அளவெட்டி ஞானவைரவர் விளையாட்டுக்கழகத்தின் 13ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் 6 பேர் ஐந்து ஓவர்களைக்கொண்ட துடுப்பாட்டப்போட்டிகள் இடம்பெற்று இறுதிப்போட்டி இன்று வெள்ளிக்கிழமை 3 மணிக்கு ஞானவைரவர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியை எதிர்த்து கோண்டாவில் கலைவாணி அணி மோதவுள்ளது. (93)

# சகலதுறையிலும் சாதிக்க விரும்பம்

கிரிக்கெட்டில் அனைத்துப் பிரிவுகளிலும் சிறப்பான முறையில் செயற்பட விரும்புகின்றேன் என இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்துள்ளார்.

என்னுடை ஒட்டுமொத்தக் கவனமும் நான் வளர்ச்சியடைகிறேனா என்பதிலேயே இருக்கிறது. எந்தத் துறையாக இருந்தாலும் அதில் வளர்ச்சியடைய விரும்ப வேண்டும்.

எனது துடுப்பாட்டத்திலும் கவனம் செலுத்தி வருகின்றேன். அணிக்குத் துடுப்பாட்டத்திலும் பங்களிக்க முயற்சிக்கின்றேன்.

டெஸ்ட் போட்டிகளாக இருக்கலாம், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளாக இருக்கலாம், ருவென்ரி -20 சர்வதேசப் போட்டிகளாக இருக்கலாம் அனைத்திலும் அடிப்படையை மறக்கக்கூடாது. தூஸ்ரா வகைப் பந்து வீச்சை முயற்சி செய்து பழகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# அணித் தரப்படுத்தலில் முன்னேற்றம் தேவை

அவுஸ்ரேலிய அணியின் தரப்படுத்தலில் முன்னேற்றங்கள் தேவை. தற்போதைய தரப்படுத்தல் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்று என அவுஸ்ரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

உலகின் முதற்தர அணியாக விளங்கிய அவுஸ்ரேலிய அணி டெஸ்ட் தரப்படுத்தலில் 3ஆவது இடத்திலும், ஒருநாள் சர்வதேசத் தரப்படுத்தலில் 4ஆவது இடத்திலும், ருவென்ரி -20 சர்வதேசத் தரப்படுத்தலில் 9ஆவது இடத்திலும் காணப்படுகிறது. அவுஸ்ரேலிய அணியில் இடம் பெறுவதற்கு அதிக கடுமையான உழைப்பும், அர்ப்பணிப்பும் தேவைப்படுகின்றன. ஆனால் அணியில் இடம்பெற்ற பின்னர் அதைவிடப் பலமடங்கு உழைப்பும், கடுமையான அர்ப்பணிப்பும் தேவைப்படுகிறது. அதையே அனைவரிடமும் எதிர்பார்க்கின்றோம். அத்தோடு, போட்டிகளுக்கு முன்னதாக வீரர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது முக்கியமானதல்ல. போட்டிகளின் போது அவர்கள் சிறப்பாகச் செயற்படுவதே முக்கியமானது. அனைத்து வீரர்களும் நிலையை உணர்ந்து சிறப்பாகச் செயற்படுவார்கள் என எதிர்பார்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# பீற்றர்ஸன் இல்லாமலேயே இங்கிலாந்து முதலிடம் பிடிக்கும்



(லண்டன்)

இங்கிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் இன்றியே இங்கிலாந்து அணியால் டெஸ்ட் தரப்படுத்தலில் மீண்டும் முதலிடத்தை அடைய முடியும் என இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் பயிற்றுவிப்பாளர் அன்டி பிளவர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணி நிர்வாகத்தோடும், அணித்தலைவர், பயிற்றுவிப்பாளரோடும் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இங்கிலாந்து அணியிலிருந்து கெவின் பீற்றர்சன் நீக்கப்பட்டுள்ள நிலையில், முதன் முறையாகக் கருத்துத் தெரிவித்துள்ள அன்டி பிளவர், இங்கிலாந்து அணி கெவின் பீற்றர்சனின்றி சிறப்பாகச் செயற்படும் எனத் தெரிவித்தார். எதுவித சந்தேகங்களுமின்றி இங்கிலாந்து அணி சிறப்பாகச் செயற்படும். இங்கிலாந்து கிரிக்கெட் மிகச்சிறப்பான வரலாற்றைக் கொண்டுள்ளதோடு, மிகச்சிறப்பான எதிர்காலத்தையும் கொண்டுள்ளது. இங்கிலாந்தின் கிரிக்கெட் எந்தவொரு தனிநபரையும் விடப் பெரியது. அது அணித்தலைவராகவோ, பயிற்றுவிப்பாளராகவோ அல்லது ஒரு வீரராகவோ இருந்தாலும் அவர்களைத் தாண்டிச் சென்று வெற்றிகளைப் பெறும். எங்களைப் பொறுத்தவரை முக்கியமான விடயமாக இங்கிலாந்தின் கிரிக்கெட்டிற்குச் சாதகமான முடிவை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# சீன ஆதிக்கத்தை முறியடித்து பதக்கம் வெல்வது கடினம்



(பெங்களூர்)

ஒலிம்பிக் பதக்கத்தை வெல்ல மிகவும் கடினமாக இருந்தது. ஏனெனில் பட்மின்ரனில் சீனாவின் ஆதிக்கத்தை அனைவரும் அறிவர். அந்த நாட்டைச் சேர்ந்த 9 - 10 வீரர், வீராங்கனைகள் முன்னணியில் உள்ளனர். அவர்களுக்கு எதிராக போட்டியிட்டு வீழ்த்துவது என்பது மிகவும் கடினமான விடயமாகும் என சாய்னா தெரிவித்தார். ஒலிம்பிக் பட்மின்ரனில்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்பதை நினைக்கும் போது மிகவும் பெருமையாக உள்ளது. இந்தப்பதக்கம் எனக்கு உந்துசக்தியாக இருக்கிறது. இது எனக்கு எதிர்காலத்தில் மேலும் சாதிக்க உண்மையிலேயே உதவிகரமாக இருக்கும் என்றார்.

இதேவேளை, மேரிகோம் கூறுகையில், லண்டன் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்ல முயற்சித்தேன். ஆனால் வெண்கலம் தான் வாங்க முடிந்தது. அடுத்த ஒலிம்பிக்கில் தங்கப்பதக்கம் வெல்ல முயற்சிப்பேன் எனத் தெரிவித்தார்.

# கருத்து வேறுபாடு காரணமாகவே டோனி விருந்தில் இல்லை?

ஹைதராபாத்தில் முன்னணி கிரிக்கெட் வீரர்களுக்கு கொடுத்த விருந்தில் லக்ஸ்மன் என்னை அழைக்கவில்லை என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார். நியூசிலாந்து தொடருக்காக கடந்த நான்கு மாதங்களாக, தீவிர பயிற்சி செய்து வந்தார் லக்ஸ்மன். இவர், டெஸ்ட் அணியில் இடம்பெ[...] நிலையில், திடீரென ஓய்வை அறிவித்தார். இதனிடையே, கடந்த 21ஆம் திகதி லக்ஸ்மன், சச்சின், சேவாக், கம்பீர் மற்றும் சகிர்கானை தனது வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்துள்ளார்.இதற்கு, என்னை அழைக்கவில்லை என டோனி வெளிப்படையாகத் தெரிவித்தார். இது இருவர் இடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாட்டை உறு[...] செய்துள்ளது. இதுகுறித்து டோனி கூறியதாவது, என்னைத் தொடர்பு கொள்வது கடினம் என, என்னைப் பற்றி அறிந்த எல்லோரும் புகார் தெரிவிக்கின்றனர். இதை ஒரு பிரச்சினையாகவே நினைக்கின்றனர். லக்ஸ்மன் என்னைத் தொடர்பு கொள்ள முடியாததுக்கு, இதுகூட ஒரு காரணமாக இருக்கலாம். இது எனக்கு ஒன்றும் புதிதல்ல. எதற்காக லக்ஸ்மன் ஓய்வு பெற்றார் என அவரிடம் நான் கேட்க வேண்டும். ராவிட், லக்ஸ்மன் சிறந்த வீரர்கள்தான். துடுப்பாட்டத்தில் மட்டுமல்லாது, ஸ்லிப் பகுதியில் களத்தடுப்பில் அசத்தும் இவர்கள் இல்லாதது, பெரும் இழப்புத்தான். இந்நிலையில், டெஸ்ட் போட்டிகளில் இளம் வீரர்கள் பொறுப்பாகச் செயற்பட்டு, தங்களை நிரூபிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

# பீற்றர்சன் நீக்கம் வேதனை

(சிட்னி)


இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் - இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை வேதனையானது என அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

பீற்றர்சன் அணிக்குச் சேர்க்கப்படாமை அணிக்கும் அவருக்கும் வேதனையானது எனவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான கெவின் பீற்றர்சன் - தென்னாபிரிக்க வீரர்களுக்கு இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ட்ரோஸிற்கு எதிரான குறுஞ்செய்திகளை அனுப்பினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஷேன் வோர்ன் தான் செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ளும் முதலாவது நபராக கெவின் பீற்றர்சனே காணப்படுவார் எனத் தெரிவித்தார்.

# புஜரா சதம் இந்தியா கௌரவம்



(ஹைதாரபாத்)

புஜராவின் அபாரமான சத்துடன் நியூசிலாந்து அணியுடனான முதலாவது போட்டியில் இந்திய அணி கௌரவமான நிலையை அடைந்துள்ளது.

இந்திய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று ஹைதராபாத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி 49 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதலாவது விக்கெட்டையும், 77 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாவது விக்கெட்டையும் இழந்து தடுமாறியது. இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சச்சின் சிறிது நேரம் தாக்குப்பிடித்தார். இருப்பினும் அவரும் 19 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார். நான்காவது விக்கெட்டுக்காக இணைந்த விராட் ஹோலி, புஜரா இணை அணியின் நிலையை உணர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த இணை 125 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பிரிக்கப்பட்டது.

இறுதியில் நேற்றைய முதல்நாள் ஆட்டம் நிறுத்தப்பட்ட வேளை இந்திய அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் அபாரமாக ஆடிய புஜரா 226 பந்துகளை எதிர்கொண்டு ஒன்பது பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மற்றும் விராட் ஹோலி 58, சேவாக் 47, ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். டோனி ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். பந்து வீச்சில் பௌல்ட் இரண்டு, மற்றின் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.


# நான்கு நாள் பயிற்சி நேற்றுடன் நிறைவு

தேசிய மட்டப் போட்டிகளில் பங்குகொள்ளவுள்ள வடமாகாணப் பாடசாலை வீர, வீராங்கனைகளுக்கான நான்கு நாள் பயிற்சி நேற்றுடன் நிறைவடைந்தது. நடப்பாண்டுக்கான வட மாகாணப் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகளில் பங்குபற்றி முதல் நான்கு இடங்களையும் பெற்றுத் தெரிவுசெய்யப்பட்டு தேசிய மட்டப் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள 300 மெய்வல்லுநர் வீர, வீராங்கனைகளுக்கான மெய்வல்லுநர் வதிவிடப்பயிற்சி முகாம் கடந்த திங்கட்கிழமை முதல் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெற்றது. இப் பயிற்சி முகாமிற்குத் தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த தேசிய மட்ட பயிற்றுநர்கள் 10 பேரும், வடமாகாண மெய்வல்லுநர் பயிற்றுநர்கள் 10 பேரும் இணைந்து பயிற்சிகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (93)



## விளையாட்டுச் செய்திகள்

## பிரமாண்ட வரவேற்பு



(டோக்கியோ)

லண்டன் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்ற ஜப்பான் வீர, வீராங்கனைகளுக்கு தலைநகர் டோக்கியோவில் பிரமாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

லண்டனில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் ஜப்பானுக்கு 7 தங்கம், 14 வெள்ளி, 17 வெண்கலப் பதக்கங்கள் கிடைத்தன. எப்போதும் இல்லாத அளவுக்கு அந்நாட்டு வீரர்கள்– வீராங்கனைகள் 38 பதக்கங்களுடன் நாடு திரும்பினர். ஜப்பான் ஒலிம்பிக் சபை இந்த வரவேற்புக்கு ஏற்பாடு செய்திருந்தது.

வீரர்–வீராங்கனைகள் அலங்கரிக்கப் பட்ட வாகனங்களில் முக்கிய வீதிகள் வழியே அழைத்துச் செல்லப்பட்டனர். பதக்கங்களை அள்ளி வந்த வீரர், வீராங்கனைகளை வரவேற்கவும், பாராட்டவும் 5 இலட்சம் பேர் திரண்டனர். இதனால் டோக்கியோ நகரம் திணறிப்போனது. அவர்கள் கேமரா, செல்போன் மூலம் போட்டோக்களை எடுத்தனர்.

அடுத்த ஒலிம்பிக் போட்டி ரியோடி–ஜெனிரோவில் நடக்கிறது. அதற்கு அடுத்த ஒலிம்பிக் போட்டியை (2020) ஜப்பான் நடத்த விரும்புகிறது. அதற்கு ஜப்பான் மக்களின் ஒட்டு மொத்த ஆதரவும் உள்ளது என்பதை வெளிக்காட்டும் வகையில், இந்த வரவேற்பில் திரண்ட மக்கள் வெள்ளம் அமைந்துள்ளது என்று ஜப்பான் ஒலிம்பிக் சங்க நிர்வாகி ஒருவர் தெரிவித்தார்.

# காலப்பந்து பாதணி வழங்கல்

(கிளிநொச்சி)

வடமாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் விளையாட்டு அமைச்சினால் கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட சங்கத்தின் கால்பந்தாட்ட பயிலுநர் நடுவர்களுக்கு பதாணிகள், பைகள் என்பன வழங்கப்பட்டன.

கடந்த 21ஆம் திகதி காலை 10.30 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்வில் வடமாகாண விளையாட்டுத்துறைப்பணிப்பாளர் தி. அண்ணாத்துரை இவர்களுக்கான உபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சர்வதேச விளையாட்டு நிகழ்வுகளுக்கு கலந்துகொள்ளும் வகையில் முன்னேற்பாடான நிகழ்வாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டம் கால்பந்தில் தற்போது சிறந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட விளையாட்டில் வடக்கிலிருந்து 350 வீரர்கள்

(கொழும்பு)

பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நான்கு கட்டங்களாக நடத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அடுத்த மாதம் ஆரம்பமாகி நடைபெறவுள்ள இப்போட்டிகளில் முதல் மூன்று கட்டங்களில் பெரு விளையாட்டுப் போட்டிகளும், நான்காம் கட்டத்தில் மெய்வல்லுநர் போட்டிகளும் நடைபெறவுள்ளன.


முதல் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி தொடக்கம் 13ஆம் திகதி வரையிலும், இரண்டாம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

மூன்றாம் கட்டப் போட்டிகள் செப்ரெம்பர் 21ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரையிலும், நான்காம் கட்டப் போட்டியான மெய்வல்லுநர் போட்டிகள் ஒக்டோபர் 9ஆம் திகதி முதல் 13ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் கலந்துகொள்வதற்காக வடமாகாணப் பாடசாலைகள் அணி சார்பில் மெய்வல்லுநர் போட்டிகளுக்கு மட்டும் சுமார் 350இற்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் தயார் செய்யப்பட்டு வருவதாகவும், அவர்களுக்கான நான்கு நாள் விசேட பயிற்சி முகாம் வழங்கப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

# ஆசிய போட்டிக்கான இலங்கை அணியில் இரு வடமாகாண வீரர்கள்





(யாழ்ப்பாணம்)

ஈரானில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 14ஆம்திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 19 வயதிற்குட்பட்ட ஆசிய பாடசாலைகள் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கான இலங்கை அணியில் வடமாகாணத்தைச் சேர்ந்த இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த கிறிஸ்திராஜ்அஜன்தன் மற்றும் மன்னார் சென்சேவியர் ஆண்கள் பாடசாலையைச் சேர்ந்த ஆர்.கே.கில்மன் சொய்சா ஆகியோர்களே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மாணவர்கள் இருவரும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியை பத்தரமுல்லையிலுள்ள வடமாகாண ஆளுநர் உப அலுவலகத்தில் 18 ஆகஸ்ட் 2012 அன்று சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டனர். இவர்களை வடமாகாண ஆளுநர் பாராட்டியதுடன் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இவர்கள் இருவரதும் ஈரான் பயணத்திற்கான விமான பயணச்சீட்டை வட மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி முன்னிலையில் வழங்கினார்.

வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

ஆசிய பாடசாலைகள் கால்பந்துப் போட்டியில் மேற்படி இரு வீரர்களும் தமது திறமைகளை வெளிப்படுத்தி வடமாகாணத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என கால்பந்து இரசிகர்கள் வாழ்த்துத் தெரிவித்தனர்.

# பல்கலைகளுக்கிடையிலான பழுதூக்கல்; கிருஷ்ணகுமார் முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற பழுதூக்கல் போட்டியில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிருஷ்ணகுமார் முதலாமிடத்தைப் பிடித்தார்.

இப்போட்டி கடந்த 18ஆம் திகதி களனிப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ப. கிருஷ்ணகுமார் 94 கிலோ கிராம் எடைப் பிரிவில் மொத்தமாக 172 கிலோ எடையினைத் தூக்கி முதலாமிடத்தையும், தெ. இந்திரகுமார் 77 கிலோ கிராம் எடைப் பிரிவில் மொத்தமாக 155 கிலோ தூக்கி மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டனர்.

இப்போட்டியில் முதலிடத்தைப் பிடித்துக் கொண்ட கிருஷ்ணகுமாருக்கு விளையாட்டுத்துறை சார்ந்த பலர் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பார்சிலோன அபார வெற்றி

(பார்சிலோனா)

ரியல் சோசியடாட் அணிக்கு எதிரான ஸ்பானிஷ்லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் நடக்கும் லா லிகா கால்பந்து போட்டியின் இரண்டாவது லீக் போட்டியில் பார்சிலோனா, ரியல் சோசியடாட் அணிகள் மோதின. தொடக்கம் முதலே பார்சிலோனா வீரர்கள் சிறப்பாக செயற்பட்டனர். போட்டியின் 4ஆவது நிமிடத்தில் இந்த அணியின் சார்லஸ் முதல் கோல் அடித்தார். இதற்கு 9ஆவது நிமிடத்தில் ரியல் சோசியடாட் வீரர் காஸ்ட்ரோ ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார்.


பின் பார்சிலோனாவின் நட்சத்திர வீரர் மெஸ்சி (11, 16ஆவது நிமிடம்) தொடர்ந்து இரண்டு கோல் அடித்து அசத்தினார். பின் 41ஆவது நிமிடத்தில் பெட்ரோ ஒரு கோல் அடிக்க, முதல் பாதியில் 4-1 என பார்சிலோனா அணி முன்னிலை பெற்றது.

பின் இரண்டாவது பாதியிலும் பார்சிலோனா அணியின் ஆதிக்கமே அதிகம் இருந்தது. 84ஆவது நிமிடத்தில் வில்லா ஒரு கோல் அடிக்க, பார்சிலோனா வெற்றி உறுதியானது. முடிவில் பார்சிலோனா அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



# சிங்கள, தமிழ் கடும் போக்காளர்கள் ஒருவருக்கொருவர் உதவுகிறார்கள்

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.



நீண்ட காலமாக ஏறத்தாழ காணாமற் போயிருந்த தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் பிரமுகர் டாக்டர் குணதாச அமரசேகர டெசோ மாநாடு தொடர்பான செய்திகள் வெளிவர ஆரம்பிக்கவே பத்திரிகையாளர் மாநாடொன்றின் போது டெசோ மாநாட்டுக்கு எதிராக கடுமையாகப் பேசியிருந்தார். புலிகள் அமைப்பு அழிக்கப்பட்ட போதிலும் தமிழீழத்திற்கான போராட்டம் தொடர்கிறது என்றும் இவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்சவும் டெசோ மாநாட்டைப் பற்றி கடந்த வாரம் தமது கருத்தைத் தெரிவித்து இருந்தார். பிரபாகரன் தமிழீழத்திற்காக பயங்கரவாதத்தை உபயோகித்து வந்த போது அதற்கு அரசியல் ரீதியாக துணையாகவிருந்தவர்கள் தமது நடவடிக்கைகளை தொடர்வதாகவும் தமிழ்நாட்டுத் தலைவர்களும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் புலம்பெயர் தமிழர்களும் ஓரணியாக நின்று தமிழீழத்தை அடைவதற்காக முயற்சிப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

சிங்கள தீவிரவாத கருத்துக்களைக் கொண்டவர்கள் கருணாநிதி உண்மையிலேயே தமிழீழத்திற்காக பாடுபடுகிறார் என இவ்வாறு கூறும்போது சில தமிழ்த் தலைவர்கள் அதற்கு மாற்றமாக கருணாநிதி இழந்த தமது அரசியல் செல்வாக்கை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக தமழீழத்தை சுலோகமாக பாவிக்கிறாரே தவிர, அதற்காக அவர் நேர்மையாகச் செயற்படவில்லை எனக் கூறுகின்றனர்.

டெசோ அமைப்பு 1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது அதன் ஆரம்ப தலைவர்களில் ஒருவராக பழ. நெடுமாறனும் இருந்தார். ஆனால் இம்முறை கருணாநிதி டெசோ மாநாட்டை கூட்ட திட்டமிட்ட போது முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட தமிழர்களுக்காக உலகத் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டே கருணாநிதி டெசோ மாநாட்டை கூட்ட வேண்டும் என நெடுமாறன் கூறியிருந்தார்.

புலிகளுக்கும் இலங்கைப் படையினருக்கும் இடையே கடைசிப் போர் நடக்கும் போது இந்திய அரசு இலங்கை அரசாங்கத்தின் போர் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் அப்போது கருணாநிதியின் தி.மு.க.வும் மத்திய அரசாங்கத்தில் இருந்ததாகவும் கூறிய நெடுமாறன் அப்போது அந்த அழிவுகளை நிறுத்த கருணாநிதி செயற்படவில்லை எனக் குற்றம் சாட்டியிருந்தார்.

தமிழ்நாட்டில் அரசியல்வாதியும் நடிகருமான விஜயகாந்தும் பிரபாகரனின் மரணத்திற்கு கருணாநிதியே காரணம் எனக் கூறியிருந்தார்.

டெசோ மாநாட்டுக்காக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசனுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு இருந்தது. இறுதி நேரத்தில் மனோ கணேசன் மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என முடிவு செய்தார். அதற்கு காரணம் கூறும் போது, தமிழ்நாட்டு அரசியலில் தலையிட தமக்குத் தேவையில்லை என்றே கூறியிருந்தார்.

டெசோ மாநாடு இலங்கைத் தமிழருக்காக கூட்டப்படுவதாகவே கூறப்பட்டது. அவ்வாறு இருக்க அது தமிழ்நாட்டு அரசியலாவது எப்படி?

இது விந்தையானதோர் நிலைமையாகும். தீவிர கருத்துடைய தமிழ்த் தலைவர்கள் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு புத்துயிரளிப்பதற்கென கருணாநிதி மேற்கொள்ளும் முயற்சியை நேர்மையற்ற செயல் எனக் கூறும் போது தீவிர கருத்துக்களைக் கொண்ட சிங்களத் தலைவர்கள் அது நேர்மையான முயற்சி என்றும் அதனை முறியடிக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

தமிழ்நாட்டுத் தலைவர்களின் கூற்றுக்களைப் பாவித்து இலங்கையில் சில சிங்களத் தலைவர்கள் இலங்கை மக்களின் மனதில் அச்ச உணர்வை ஊட்டி அரசியல் இலாபம் தேட முயற்சிப்பதைப் போலவே, இலங்கையில் தீவிர கருத்துள்ள சிங்கள அரசியல்வாதிகளின் கூற்றுக்களை தமிழ்நாட்டு மக்களை ஆத்திரமூட்டி அரசியல் நடத்த அங்கு அரசியல்வாதிகளும் பாவிக்கிறார்கள்.

ஆனால், இவ்விரு சாராரினதும் தேசப்பற்றின் அளவு உலகறிந்த விடயமாகும். கருணாநிதியின் இன உணர்வை தமிழ் தலைவர்களே விமர்சிக்கிறார்கள். முதலமைச்சர் ஜெயலலிதா போர் உச்சக் கட்டத்தில் நடந்து கொண்டிருந்த வேளை அதாவது 2008ஆம் ஆண்டு இறுதியில் "சாதாரண மக்கள் கொல்லப்படுவது எந்தவொரு போரின் போதும் தவிர்க்க முடியாதது" என்று கூறியவர்.

இலங்கையிலும் சிலர் ஐ.நா செயலாளர் நாயகம் இலங்கை விடயத்தில் தமக்கு ஆலோசனை வழங்க குழுவொன்றை நியமித்த போது தேசப்பற்றை காட்டிக் கொண்டு கொதித்தெழுந்தனர். விமல் வீரவன்ச "சாகும் வரை" உண்ணாவிரதமும் நடத்தினார். ஆனால் அதே ஐ.நா. குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்ய திட்டமிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதனை ஏற்றுக் கொண்ட போது இவர்கள் வாய் மூடி மௌனமாக இருந்து விட்டனர்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை தேசப்பற்றின் காரணமாக கடுமையாக விமர்சித்தவர்கள் அரசாங்கம் அதே நவநீதம்பிள்ளைக்கு இலங்கைக்கு வருமாறு கடந்த மாதம் அழைப்பு விடுத்த போது அதொன்றும் தெரியாதவர்களைப் போல் இருந்து விட்டனர். ஆனால் தமிழ்நாட்டுத் தலைவர்களைப் பார்த்து கர்ஜித்துக் கொண்டு இருக்கிறார்கள்.



சுருக்கமாக கூறுவதாயின் இலங்கையின் சிங்கள தீவிரவாத கருத்துக்களை கொண்ட அரசியல்வாதிகளுக்கு தமிழ்நாட்டு தீவிரவாத அரசியல்வாதிகளும், தமிழ்நாட்டு தீவிரவாத அரசியல்வாதிகளுக்கு இலங்கையின் தீவிரவாத கருத்துக் கொண்ட அரசியல்வாதிகளும் அவரவரது அரசியலை நடத்த உதவிக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கையிலுள்ளவர்கள் தமிழ்நாட்டிலிருந்து நல்ல செய்தி வருவதை விரும்பவில்லை. தமிழ்நாட்டுத் தலைவர்களும் இலங்கையிலிருந்து நல்ல செய்தி வருவதை விரும்பவில்லை.





✤ "உன்னாலே உன்னாலே" படத்தில் நடித்த நேரம், ரொமான்டிக் ஹீரோவாகப் போவதாக சொன்ன வினய், இப்போது, "மிரட்டல்" படத்துக்குப் பின், இனி, ஆக்ஷன் கலந்த காமெடி கதைகளுக்கு முக்கியத்துவம் தரப் போவதாக சொல்கிறார்.

✤ "எப்படி மனசுக்குள் வந்தாய்?" படநாயகி தன்வியாஷ், நமீதாவை போலவே, குஜராத்தை சேர்ந்தவர். 2008இல், "மிஸ் இந்தியா எர்த்" பட்டம் பெற்றுள்ள அவர், என்.டி."டிவி"யில் தொகுப்பாளினியாக இருக்கிறார். துபாயில் நடக்கும், "பியூட்டி குயின் மிஸ் இந்தியா" போட்டியில் நடுவராகவும் கலந்து கொள்கிறார்.



✤ அடிக்கடி தனது மனேஜர்களை மாற்றி வரும் அமலாபால், இதுவரை எட்டுப் பேரை நீக்கியுள்ளார். தற்போது ஒன்பதாவதாக நியமித்திருக்கும் புதிய மனேஜருக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை: "அதிக சம்பளம் வாங்கும் நடிகை, ராசியான நடிகை, பிஸியான நடிகை என்பது போலத்தான் பத்திரிகைகளில் செய்தி வர வேண்டும், கிசுகிசு வரவே கூடாது"

✤ எம்மதமும் சம்மதம் என்பதை விளக்கும் வகையில் இந்துவாக, இஸ்லாமியராக, கிறிஸ்துவராக வேடம் அணிந்து



டி.ராஜேந்தர் எடுத்திருக்கும் புதிய புகைப்படம் அவர் அலுவலகத்தை அலங்கரிக்கிறது. ஏன் இது என்று கேட்டால், ஜாதி, மதங்களை துறந்தவன் இந்த டி.ஆரு. என்கிறாராம் தன் பாணியில்.

✤ சில படங்களில் ஒலிப்பதிவு அறையில் பாடுவது போல சில காட்சிகளில் நடித்துள்ள பிரபல பின்னணிப் பாடகர் கே.ஜே.யேசுதாஸ், "தெருவு நட்சத்திரங்கள்" என்ற மலையாளப் படத்தில் ஒரு பாடலைப் பாடும் தனி கதாபாத்திரமாக நடிக்கிறார்.

✤ மலையாளத்தில் சூப்பர் ஹிட் ஆன "ட்ரா..பிக்" படத்தை தமிழில் ரீமேக் செய்கிறார் ராதிகா. சரத்குமார் கதாநாயகன். நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவருடன் இணைந்து நடிக்கிறார் ராதிகா. பிரகாஷ்ராஜ், சேரன், பிரசன்னா ஆகியோரும் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

✤ தன் வீட்டில் பெரிய அளவில் வைக்கப்பட்டுள்ள மறைந்த ஜேர்மன் காரப் பந்தய வீரர் ஆல்க்ஷாவின் புகைப்படத்தின் முன் தினமும் காலை வேளைகளில் மனம் உருகி நிற்பாராம் நடிகர் அஜித். தனக்கு கார் ரேஸிங் மீது ஆர்வம் வர அவர்தான் காரணம் என்கிறார்.



✤ தான் உடுத்தும் ஆடைகள், கண்ணாடி எல்லாவற்றையும் கறுப்பு நிறத்திலேயே அணிய ஆசைப்படுவார் ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம். அதுமட்டுமல்ல, கறுப்புநிற ஸ்கூட்டரில் கறுப்பு ஹெல்மெட் அணிந்து கொண்டு மாலைநேரம் வீதிகளில் வலம் வருவதில் அதிக ஆர்வம் காட்டுவார்.



✤ சில்க் ஸ்மிதாவின் கதையை, பல மொழிகளிலும் படமாக்கி வருவதைத் தொடர்ந்து, சில புதிய நடிகையர் அவரது நடிப்பை பின்பற்றவும் துவங்கியுள்ளனராம். மிஷ்கினின் "முகமூடி" படத்தில் நடித்துள்ள பூஜா ஹெக்டே, சில்க் அணிந்து நடித்தது போன்ற ஆடையலங்காரங்களையே பின்பற்றுகிறாராம்.


## சிலேடை மன்னன்!

கி.வா.ஜ. ஒருநாள் வீட்டில் உப்புமா சாப்பிட்டுக் கொண்டிருந்தார். கூடவே சில நண்பர்களும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். கி.வா.ஜ. "இதற்கு உப்புமா என்று ஏன் பெயர் வந்தது?" என்று ஒரு கேள்வியைக் கேட்டார். பரிமாறிய பெண்மணி ஒருவேளை உப்புமாவில் உப்பு அதிகமாகிவிட்டதோ என்று மலங்க மலங்க விழித்தார். உப்பெல்லாம் சரியான அளவில்தான் இருந்தது. ஓர் அன்பர், "உப்புப் போட்டுச் செய்வதால் அந்தப் பெயர் வந்திருக்கலாம்!" என்றார்.

"இட்டிலி கூட உப்புப் போட்டுச் செய்வதுதான். ஏன் தோசை, பிட்டு முதலிய பலவும் உப்புப் போட்டுச் செய்வதுதானே. இதற்கு மட்டும் எப்படி உப்புமா என்று பெயர் வருவானேன்" என்று மறுபடியும் கேட்டார். பிறகு அவரே அதற்கு இப்படி ஒரு விளக்கம் கூறினார்.

"இதைச் சாப்பிட்டுவிட்டுத் தண்ணீர் குடிக்கக் குடிக்க வயிற்றில் உப்பிக் கொண்டே வரும்! உப்பும் மா இது. அதனால் இந்தப் பேர் வந்தது!"

**("சிரிக்க வைக்கிறார் கி.வா.ஜ." நூலிலிருந்து)**



# இந்தியாவுடனான தடைகளை எப்படி தகர்க்கப் போகிறது இலங்கை?

**- கே. சஞ்சயன் கட்டுரையிலிருந்து.**

ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள பூகோள கால மீளாய்வு கூட்டத்துக்கு முன்னதாக, இந்தியாவுடனான உறவுகளைச் சீர்படுத்திக் கொள்ள வேண்டிய நிலையில் இலங்கை அரசாங்கம் இருக்கிறது.

ஜெனிவாவில் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அடுத்து, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளில் ஒரு தேக்கம் உருவாகியுள்ளது.

இந்தியாவுடன் எமக்கு எந்தப் பனிப்போரும் இல்லை, பனிக்காதல் தான் உள்ளது என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியிருந்தாலும், அது எந்தளவுக்கு உண்மை என்பதை, நடப்பு நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானிக்கின்ற ஒருவரால் புரிந்து கொண்டு விட முடியும்.

போர் முடிவுக்கு வந்த பின்னர், இந்தியாவுடனான நெருக்கத்தைக் குறைக்கத் தொடங்கிய இலங்கை, கடந்த மார்ச் மாதத்துக்குப் பின்னர் கணிசமான தூரம் விலகியே நிற்கிறது.

அண்மையில் “ரைம்ஸ் ஒவ் இந்தியா”வுக்கு அளித்த பேட்டி ஒன்றில் கூட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவின் முடிவின் மீதான வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

ஜெனிவா தீர்மானம் தொடர்பான கருத்தின் ஒரு கட்டத்தில் அவர், “இந்தியா எமக்கு ஆதரவாக நின்று, மேலும் காலஅவகாசம் வழங்கப்பட வேண்டும் என்ற எமது கோரிக்கைக்கு ஆதரவளித்திருந்தால், அவ்வாறான தீர்மானமே இல்லாமல் போயிருக்கும்” என்று குறிபபிட்டிருந்தார்.

அதாவது ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக வாக்களிப்பதை விட, அந்தத் தீர்மானமே வராமல் இந்தியா தடுத்திருக்கலாம் என்ற குற்றச்சாட்டு அவரது கருத்தில் தொக்கி நிற்கிறது. இது இந்தியாவில் இருந்து இலங்கை எட்ட விலகி நிற்பதற்கான முக்கியமான காரணம்.

அதேவேளை, தனது சொல்லை இலங்கை கேட்காமல் ஏமாற்றுகிறது, சீனாவின் பக்கம் சார்ந்து செல்கிறது என்று கருத்து இந்தியாவிடம் ஆழமாக உறைந்து விட்டது.

எவ்வாறாயினும் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் இருந்து வரும் இந்த இடைவெளியை எப்படியேனும் குறைத்தேயாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது இலங்கை அரசரங்கம்.

காரணம் இன்னும் இரண்டரை மாதங்களில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் - பூகோள கால மீளாய்வு கூட்டத்தை இலங்கை சந்திக்கப் போகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும் இந்த மீளாய்வுக் கூட்டத்தில் இலங்கையின் மனித-உரிமைகள் நிலையை மதிப்பீடு செய்வதற்கு மூன்று நாடுகளைப் பொறுப்பாக நியமித்துள்ளார் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.

இந்தியா, பெனின், ஸ்பெய்ன் ஆகிய அந்த மூன்று நாடுகளுமே இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்தவை.

இலங்கைக்கு மிகவும் வேண்டிய நாடு இந்தியா. இந்தியா நினைத்தால் ஜெனிவாவில் தனக்கு எதிரான எந்தப் பிரச்சினையையும் சமாளித்து விடலாம் என்று இலங்கை நம்புகிறது. இதற்கு, இரு நாடுகளுக்கும் இடையில் எழுந்துள்ள தடைகளை உடைத்தாக வேண்டும். உயர்மட்டக் குழுவை புதுடில்லிக்கு அனுப்ப வேண்டும்.

அத்தகைய குழுவொன்றை அனுப்பி சிக்கல்களைத் தீர்க்கும் முயற்சிகளும் கூடத் தடைப்பட்டுள்ளதாகவே கூறப்படுகிறது. அமைச்சர்கள் மட்டத்தில் தொடர்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அற்றுப்போனால், இருக்கின்ற ஒரே வழி அதற்கும் உயர்மட்டத்தில் உள்ளவர்களின் சந்திப்புத் தான். அதாவது, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சந்திக்க வேண்டும்.

அண்மைக்காலமாகவே, மகிந்த ராஜபக்ஷவும், மன்மோகன்சிங்கும் சர்வதேச மாநாடுகளில் தான் சந்தித்து வருகின்றனர்.


இப்போதெல்லாம் சர்வதேச மாநாடுகளில், நாடுகளின் தலைவர்கள் தனியாகச் சந்திப்பதற்கேற்ற - பக்க நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. அந்த வகையில், கடைசியாக பிறேசிலில் நடந்த றியோ 20 பிளஸ் மாநாட்டில் இருவரும் சந்தித்திருந்தனர்.

வரும் நவம்பர் முதலாம் திகதிக்குள் இலங்கை, இந்திய தலைவர்கள் பங்கேற்கும் இரண்டு உயர்மட்ட சர்வதேச கூட்டங்கள் நடக்கவுள்ளன.

அடுத்த மாதம் 25ஆம் திகதி நியூயோர்க்கில் தொடங்கும் ஐ.நா பொதுச்சபைக் கூட்டம் ஒன்று. அடுத்தது, இந்த மாதம் 26ஆம் திகதி தெஹ்ரானில் தொடங்கும் அணிசேரா நாடுகளின் உச்சிமாநாடு.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் இரண்டாவது நாள் (செப்ரெம்பர் 26) மாலை அமர்வில் ஜனாதிபதி உரையாற்றவுள்ளார். ஆனால் இந்தக் கூட்டத்துக்கு மன்மோகன்சிங் வரப் போவதில்லை. எனவே, அந்தக் கூட்டத்தில் சந்திக்க வாய்ப்பில்லை. அடுத்து இருப்பது, வரும் 26ஆம் திகதி தெஹ்ரானில் தொடங்கும் அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு தான். இதில் இரு தலைவர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில், இந்தியாவுடன் நெருக்கத்தை ஏற்படுத்திக்



கொள்வதற்கு, மகிந்த ராஜபக்ஷ எந்த வழியைத் தெரிவு செய்யப் போகிறார் - எப்படி அணுகப் போகிறார்? என்ற கேள்விகளே இப்போது முக்கியமானதாக உள்ளது.

---

# அமிலம், காரம், உப்பு

**- பத்ரி சேஷாத்ரி -**



அமிலம், காரம், உப்பு ஆகிய இரசாயனப்பொருள்கள் பற்றித் தெரிந்துகொள்வோம். சாப்பிடும் உப்பு (சோடியம் குளோரைட்) மனித உணவில் சில ஆயிரம் ஆண்டுகளாக இருந்திருக்க வேண்டும். உப்பளங்கள், கடல் நீரிலிருந்து உப்பு எடுப்பது போன்றவை பற்றி நாம் பண்டைய இலக்கியங்களிலேயே படித்திருக்கிறோம்.

அமிலங்கள் பலவற்றையும் தினம் தினம் நாம் சமையலில் பயன்படுத்துகிறோம். எலுமிச்சை (சித்திரிக் அமிலம்), புளி (தாத்தாரிக் அமிலம்) ஆகியவை இல்லாத சமையலே நம்மிடம் இல்லை. புளிக்காடி எனப்படும் வினிகரும் (அசிற்றிக் அமிலம்) சமையலில் பயன்படும் பொருள்தான். இந்தக் காடியை அப்பிள், கரும்பு, தேங்காய், பேரீச்சை என்று அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் பொருள்களிலிருந்து தயாரிக்கலாம்.

இவை எல்லாமே உணவில் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இவற்றையெல்லாம்விட மிக வலுவான ஓர் அமிலம் நம் வயிற்றில் எப்பொதும் சுரந்துகொண்டே இருக்கிறது. அதுதான் ஹைட்ரோகுளோரிக் அமிலம்.

அமிலம் என்றாலே ஒருவித புளிப்புச் சுவை. அதேபோல காரம் என்பதில் ஒருவித காரமான எரிச்சல் தரும் சுவை. உப்பின் சுவை நமக்கு நன்றாகவே தெரியும். காரம் என்பதற்கு நல்லதோர் உதாரணம், வெற்றிலையுடன் போடப்படும் சுண்ணாம்பு. அதில் இருக்கும் கல்சியம் ஐதரொக்சைட் என்பது ஒரு காரம்.

பல உலோகங்களின் தாதுக்களை, மேலே சொன்ன சுண்ணாம்புடன் சேர்த்து தாச்சியில் இட்டு வறுக்கும்போது பலவகைக் காரங்கள் கிடைத்தன.

எளிதில் தயாரிக்க முடிந்த ஓர் அமிலம் சல்பூரிக் அமிலம் அல்லது கந்தக அமிலம். கந்தகத்தைக் காற்றில் எரித்து, அதன்மூலம் உருவாகும் புகையை நீரில் கரைத்தால் கந்தக அமிலம் கிடைத்துவிடும். இந்தக் கரைசல் ரசவாதிகள் கையில் மிக முக்கியமான பொருளாக ஆனது. இந்தக் கரைசல் பெரும்பாலான உலோகங்களைக் கரைக்கவல்லது. ஆனால் சில உலோகங்கள் இதற்கு மசியாது.

இந்த கந்தக அமிலக் கரைசலை எடுத்துக்கொண்டு அதில் சாப்பாட்டு உப்பைக் கொட்டினால் உடனே ஹைட்ரோகுளோரிக் அமிலம் கிடைத்துவிடும். அதாவது நம் வயிற்றில் கிடைக்கிறதே, அந்த அமிலம். இப்போது நம் ரசவாதிகளுக்கு இரண்டாவது அமிலம் கிடைத்துவிட்டது.

இதைவிட வலுவான ஓர் அமிலம் உண்டு. வெடி உப்பு என்று ஒரு பொருள் சொல்வார்கள். இயற்கையில் கிடைக்கக்கூடியது. இதனைக் கொண்டுதான் ஆரம்பகாலத்தில் துப்பாக்கி வெடிமருந்தைத் தயாரித்தார்கள். அதனால்தான் இதன் பெயரும் வெடி உப்பு! இந்த வெடி உப்பு என்பது பொட்டாசியம் நைதரேற் என்பது.

எப்படி சாப்பாட்டு உப்பை (சோடியம் குளோரைட்) கந்தக அமிலத்தில் போட்டால் ஹைட்ரோகுளோரிக் அமிலம் கிடைக்கிறதோ, அதேபோல வெடி உப்பை (பொட்டாசியம் நைதரேற்) கந்தக அமிலத்தில் போட்டால் நைத்திரிக் அமிலம் கிடைக்கும்.

இந்த அமிலம் முதற்சொன்ன இரண்டு அமிலங்களைவிடவும் அதிக வீரியம் கொண்டது. தோலில் பட்டால் எரித்துப் பிய்த்துவிடும் என்பது மட்டுமல்ல, பொதுவாக மேலே சொன்ன அமிலங்களில் கரையாத உலோகங்களும்கூட நைத்திரிக் அமிலத்தில் கரையும்.


ஆனால் இந்தத் தங்கம் இருக்கிறதே. அது இந்த எல்லா அமிலங்களுக்கும் டிமிக்கி கொடுத்துவந்தது. தனித்தனியாக சல்பூரிக் அமிலம், நைத்திரிக் அமிலம், ஹைட்ரோகுளோரிக் அமிலம் என்று எதில் போட்டாலும் கரையவில்லை.

அதற்கு ஒரு தனிக் கலவை தேவைப்பட்டது. ஒரு பங்கு நைத்திரிக் அமிலம், மூன்று பங்கு ஹைட்ரோகுளோரிக் அமிலம் கலந்த கலவை. இது தங்கத்தையே கரைத்துவிடக்கூடிய தன்மை கொண்டது. இதற்கு அக்வா ரீஜியா என்று பெயர்.

ஆக இவற்றை எல்லாம் வைத்துக்கொண்டுதான் ரசவாதிகள் தங்கள் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமனாக ஈயத்தைத் தங்கமாக மாற்றும் முயற்சியில் இறங்கியிருந்தனர். ஆனால் அவர்கள் இல்லையென்றால் இத்தனை அமிலங்கள், காரங்கள், உப்புகள் ஆகியவை நமக்குக் கிடைத்திருக்காது.




# யா/ஹாட்லிக் கல்லூரி



பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகள் சகிதம் பாடசாலை அதிபர்


## எமது பாடசாலை பற்றி...

வடமராட்சியில் பருத்தித்துறையின் மத்தியில் முதல் தரப் பாடசாலையாம் எமது பாடசாலை 1838ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. Dr.Peter Pecival அவர்களால் இப் பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இவர் 1838 தொடக்கம் 1860 வரை கடமையாற்றினார்.




Dr.Peter Pecival

பாடசாலை அதிபர்கள் வரிசையில் Dr.peter Pecivel, Mr. D.P.Niles, Mr.Samuel Hensmor Mr J.C. Sherrad, Mr.S.A.Paul pillai, Mr .S.S. Kanapathipillai, Mr.E.S. Abraham, Mr.C.P. Thamotheram, Mr.K.Poora nampillai, Mr.S.Ratnasa bapathy, Mr.C.Rajathurai, Mr.K.Nadarajah, Mr.V.Pathmanathan, Mr.N.Thei vendraraja ஆகியோர் கடமையாற்றினார்கள். எமது பாடசாலை கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டுத் துறை ஏனையவற்றிலும் முன்னணியில் திகழ்கின்றது. கோட்டம், வலயம், மாகாணம் இதையும் தாண்டி தேசிய மட்டத்திலும் மாணவர்கள் முன்னிலையில் திறமையை வெளிப்படுத்தினர். எமது பாடசாலை தரம் 6இல் இருந்து தரம் 13வரை வகுப்புக்கள் உள்ளன. 75 ஆசிரியர்கள் சேவையாற்றுகின்றனர். ஏறத்தாழ 15000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். எமது பாடசாலை மாணவர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பல்வேறு துறைசார் பல்கலைக்கழகங்களிலும் திறமைகளைச் சாதித்து வருகின்றனர். எமது பாடசாலையில் இருந்து வெளியேறிய பின்பும் சிறந்த கல்விமான்களாக நாட்டுக்கு சிறந்த வளத்தையும் முன்னேற்றத்தையும் தேடிக்கொடுத்துக்கொண்டு இருக்கின்றனர். எமது பாடசாலையின் ஆசிரியர்களும் தம்மை அர்ப்பணித்து மாணவர்களின் எல்லாவிதமான செயற்பாடுகளிலும் பங்கெடுத்து மாணவர்களை சிறந்த கல்விமான்களாக மாற்றுகின்றனர். எமது பாடசாலையின் பழைய மாணவர்சங்கமும், பெற்றார் ஆசிரியர் சங்கமும், அதிபர் ஆசிரியர்கள் அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவதால் சிறந்து விளங்குகின்றது. எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் கொழும்பு, பிரித்தானியா, அவுஸ்ரேலியா, கனடா போன்ற நாடுகளில் சங்கங்களை அமைத்து பாடசாலைக்கு உதவி வழங்குகின்றனர். எமது பாடசாலை 150 வருடங்களைத் தாண்டியும் தேசிய மட்டத்தில் முன்னணிப் பாடசாலையாக திகழ்கின்றது.



வடமாகாணத்தில் 15 வயதுக்கு கீழ்ப்பட்ட (சதுரங்கப் போட்டியில்) வெற்றியீட்டிய மாணவர்கள், அதிபர் ஆசிரியர்களுடன்...



வடமாகாண மட்டத்தில் 19 வயதுக்கு கீழ்ப்பட்ட (சதுரங்க போட்டியில்) வெற்றியீட்டிய மாணவர்கள், அதிபர் ஆசிரியர்களுடன்...



### அதிபர் திரு.என். தெய்வேந்திரராஜா

இவர்தான் எமது பாடசாலையின் தற்போதைய அதிபர் ஆவர். இவர் 2005 ஆம் ஆண்டு பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார். இவர் பாடசாலையின் பழைய மாணவரும் ஆவார். கரவை மண் பெற்றெடுத்த சிறந்த கல்விமான் ஆவார். இவர் பாடசாலைக்கு வந்த பின் பாடசாலைக்கு என தன்னை அர்ப்பணித்தார். பாடசாலையின் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டுத்துறை போன்ற அனைத்திலும் அக்கறை காட்டினார். இவர் பாடசாலைக்கு வந்த பின்னர்தான் பெரும்பாலான மாணவர்கள் தேசிய மட்டம் வரை போட்டிகளில் கலந்து கொண்டனர். மாணவர்களுடன், தானே நின்று அனைத்துச் செயற்பாடுகளையும் கவனித்து முன்னேற்றத்துக்கு வழிகாட்டி வந்தார். இவர் மாணவர்களின் கல்வியில் மட்டும் அல்லாது சமூக பழக்க வழக்கங்களையும் மாணவர்களுக்கு வழிகாட்டினார். எமது பாடசாலைக்கு தற் போதைய அதிபர் கிடைத்தது ஒரு வரப்பிரசாதம் ஆகும். இனிமேலும் தொடர்ந்தும் இவருடைய சேவை நிலைக்க வேண்டும் என இறைவனை வேண்டுகிறோம். பாடசாலையைப் புதியதோர் வடிவத்தில் மாற்றி மாணவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்த கல்விமானை வாழ்த்துகிறோம்.

# நிதிப்பற்றாக்குறையிலும் சிறப்பாக இயங்க ஊழியர்களின் செயற்பாடே காரணம்

## – யாழ். மாவட்ட கடற்தொழில் கூட்டுறவு சம்மேளனத் தலைவர்

(கிரு - சிகரம்)

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் நிதிப்பற்றாக் குறையுடன்' இயங்கி வருவதாகவும், இந்த நிலையிலும் ஊழியர்கள் பதவிநிலை பாராது ஒன்றுபட்டு செயற்பட்டு வருகின்றமையினாலேயே இதனது செயற்பாடுகளை முன்னகர்த்திச் செல்லக்கூடியதாக இருப்பதாகவும், யாழ். மாவட்ட கடற்தொழில கூட்டுறவு சம்மேளனத் தலைவர் எமிலியாம் பிள்ளை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில்:

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம், யாழ்ப்பாணத்தில் உள்ள 11 சமாசங்களையும் ஒன்றிணைத்து வடக்கின் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிப்பதற்கேற்ற வகையில் திட்டங்களை வகுத்து செயற்பட்டு வருகிறது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் வடக்கு மீனவர்களின் பங்கு போருக்கு முன்னர் 80 வீதம் தொடக்கம் 90 வீதமாகக் காணப்பட்டது. ஆனால் தற்போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு வடக்கு மீனவர்கள் 10 வீதத்திற்கும் குறைவான பங்களிப்பினையே வழங்கி வருகின்றனர். இதனை அதிகரிக்கும் நோக்கத்துடனேயே கடந்த 14 வருடங்களுக்கு மேலாக இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த பருத்தித்துறை இறங்குதுறைமுகம் மீனவர்களின் பாவனைக்காக விடுவிக்கப்பட்டுள்ளது.



பருத்தித்துறை இறங்குதுறை மீனவர்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது போலவே எதிர்காலத்தில் இராணுவ மற்றும் கடற்படையின் பாதுகாப்பில் உள்ள ஏனைய இறங்குதுறைகளும் மீனவர் பாவனைக்கு திறந்து விடுவதற்கு இராணுவமும், கடற்படையும் ஒத்துழைப்பு வழங்குவதாக என்னிடம் உறுதியளித்துள்ளது.

இவ்வாறு நாம் எடுக்கும் பல முயற்சிகளுக்கு மீனவ மக்களின் ஆதரவு காணப்பட்டாலும், அது போதியதாக இல்லை. மீனவ மக்களின் ஆதரவு இருந்தால் மட்டுமே எமது நிறுவனத்தால் திறம்பட செயற்பட்டு போருக்கு முன்னர் இலங்கையின் மொத்த தேசிய உற்பத்திக்கு மீனவர்களின் பங்கு எவ்வாறு காணப்பட்டதோ அவ்வாறான ஒரு நிலையை மீண்டும் தோற்றுவிக்க முடியும்.

தற்போது உள்ள குளிர்சாதனப் பெட்டி வசதிகளைக்கொண்டு 25 கிலோவுடைய 42ஐஸ் கட்டிகள் மட்டுமே ஒரே தடவையில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனை அதிகரிக்க இலங்கை கடற்தொழில் அமைச்சு மேலதிகமாக இன்னும் குளிர்சாதனப்பெட்டிகளை வழங்கினால் எமது நிறுவனத்தை இன்னும் வளர்ச்சி நிலைக்குக் கொண்டு செல்ல முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) கீழ் வரும் இடங்களில் வைத்து வழங்கப் படவுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசியினை ஏற்றிக் கொள்மாறு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி எ.ஞானசோதி அறிவித்துள்ளார்.

இதன்படி 27ஆம் திகதி மு.ப. 9 மணிதொடக்கம் மு.ப. 11 மணிவரை கலைமகள் சனசமூக நிலையம் கலைமகள் வீதி அரியாலை, மு.ப.11.30 தொடக்கம் பி.ப. 1.30 மணிவரை காந்தி சனசமூக நிலையம் ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை.

28ஆம் திகதி மு.ப. 9 மணி தொடக்கம் 11.00 மணிவரை அருணோதய சனசமூக நிலையம் A.V. றோட் அரியாலை, மு.ப. 11.30 தொடக்கம் 1.30 மணி வரை திருமகள் சனசமூக நிலையம் திருமகள் வீதி அரியாலை.

29ஆம் திகதி மு.ப. 9 மணி தொடக்கம் 11.00 மணிவரை பாரதி சனசமூக நிலையம், செம்மணி றோட் நாயன்மார்க்கட்டு, மு.ப.11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை அம்பாள் சனசமூக நிலையம் அம்பாள் வீதி, நாயன்மார்க்கட்டு.


30ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை சுயா போட்டோ முன்புறம் பாரதி வீதி அரியாலை, மு.ப. 11.30 மணி தொடக்கம் 1.30 மணி வரை கனகரட்ணம் மகாவித்தியாலய முன்புறம் நாவலர் வீதி ஆகிய இடங்களிலும்,

செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம் பலம் வீதி அரியாலை, மு.ப. 11.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை ஆள்காட்டி வீதி அருளம்பல வீதிச் சந்தி ஆகிய இடங் களிலும்,

04ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் மு.ப. 11.00 மணி வரை நிறைபார்க்கும் மையம், இராஜேஸ்வரி வீதி அரியாலை, மு.ப. 11.30 மணிதொடக்கம் 1.30 மணிவரை பெரிய பாலத்தடி ஆசீர்வாதப்பர் வீதி அரியாலை ஆகிய இடங்களிலும்,

5ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை பாண்டியந்தாழ்வு வைரவர் கோவில் கொழும்புத்துறை வீதி, மு.ப.11.30 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணி வரை கனகரட்ணம் வீதி நாவலர் வீதி சந்தி ஆகியஇடங்களிலும்,

6ஆம் திகதி மு.ப. 9.00 மணி தொடக்கம் 11.00 மணிவரை பென்டிக்கோஸ் அருகில் கண்டி வீதி கச்சேரியடி, மு.ப. 11.30 மணி தொடக்கம் பி.ப. 1.30 மணிவரை முள்ளி வீதி அரியாலை ஆகிய இடங்களிலும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.





மண்டைதீவு- திருவெண்காடு சித்திவிநாயகர் கோவில் வருடாந்த திருவிழா கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது. அன்றையதினம் முற்பகல் விநாயகப்பெருமானுக்கு கொடியேற்றம் நிகழ்வதையும் பெருமான் வீதியுலாவருவதையும் காணலாம்.

# பதிவிறக்கப் பெட்டகம்

அழகான ஒரு பெண்மணிக்கு அலாவுதீனின் அற்புத விளக்குக் கிடைத்தது. அவசரமாக அதைத் தேய்த்தாள்.

பூதம் வெளியே வந்தது.

“நான் உங்கள் அழமை. உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்”

பெண் கேட்டாள்: “என் கணவர் என்னைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அவரது அன்றாட வாழ்வில் எனக்கு மட்டும் தான் முக்கிய பங்கு இருக்க வேண்டும். அவர் எங்கு சென்றாலும் நான் அவருடன் இருக்க வேண்டும். காலையில் கண் விழித்ததும் என்னிடம்தான் அவர் வர வேண்டும்”

பூதம் அந்தப் பெண்ணை செல்போனாக மாற்றியது.

*** *** ***

**மனைவி:** உங்க பையன் பண்ணியிருக்கிறதைப் பாருங்க. ஒரு பேப்பர்ல உங்க பேரை எழுதி ஃபிரிட்ஜ்க்குள்ள வைச்சிருக்கிறான்.

**கணவன்:** அப்படியா பண்ணினான். டேய்... பிரவீண் இங்க வா. ஏன்ரா என் பெயரை எழுதி ஃபிரிட்ஜ்க்குள்ள வைச்சாய்?

**பையன்:** அம்மாதான் சொன்னா. அப்பான்ர பேர் கெடாமல் பார்த்துக்கொள்ளச் சொல்லி...

*** *** ***

ஒரு ‘மகளிர் மட்டும்’ பேருந்து விபத்துக்குள்ளானது. அதிலிருந்த எல்லாப் பெண்களும் பலியானார்கள். சம்பந்தப்பட்ட பெண்களின் கணவர்கள் இரண்டு நாட்கள் அழுது தீர்த்தனர். ஆனால் ஒருவர் மட்டும் இரண்டு வாரங்களாகியும் அழுகையை நிறுத்தவில்லை. ஏனென்று சொல் பார்க்கலாம்?

தன் மனைவி மேல் அவர் உயிரையே வைத்திருப்பார். அது தான்.

இல்லை. அவருடைய மனைவி அந்த விபத்துக்குள்ளான பேருந்தை தவறவிட்டுவிட்டவளாம்!

*** *** ***

இரவு மணி 10.00. ஹோட்டல் ரிசப்ஷனிஸ்ட் ஹோட்டலில் தங்கியிருந்த ஒருவரிடம் கேட்டாள்:

“சேர் காலையில் தங்களை எழுப்பிவிட வேண்டுமா?”

“தேவையில்லை. நான் அதிகாலை 5 மணிக்கே எழுந்துவிடுவேன்”

ரிசப்ஷனிஸ்ட் கூறினாள்:

“ரொம்ப நல்லது. அப்படியென்றால் என்னைக் கொஞ்சம் 5 மணிக்கு எழுப்பிவிடுங்கள்”

*** *** ***

அரசியல் : ஒரு விளக்கம்

ஒரே ஒரு ஊரில் ஒரு சின்னப்பையன் தன்னுடைய அப்பாவிடம் சென்று “அரசியல் என்றால் என்ன அப்பா” என்று கேட்டான்.

அப்பா சொன்னார். “பையா, இப்படி உனக்கு விளக்க முயற்சிக்கிறேன். நான் தான் இந்த குடும்பத்துக்கு சம்பாதித்து, சாபபாடு கொண்டுவருகிறவன். என்னை முதலாளி என்று கூப்பிடலாம். உன்னுடைய அம்மா, நான் கொண்டுவரும் பணத்தை நிர்வகிக்கிறாள். ஆகவே அவளை அரசாங்கம் என்று அழைக்கலாம். நாங்கள் உங்களைக் கவனித்துக்கொள்ள இருக்கிறோம். நீயும் உன் தம்பியும் நம் பொதுமக்கள். நம் வீட்டு வேலைக்காரியை உழைக்கும் வர்க்கம் என்று அழைக்கலாம். உன் தம்பியை எதிர்காலம் என்று கூப்பிடலாம். இப்படி நான் சொன்னதைப் பற்றி.... புரிகிறதா என்று யோசித்துப்பார்” என்றார் அப்பா.

பையன் அப்பா சொன்னதைப் பற்றி யோசித்துக்கொண்டே தூங்கப்போனான்.

இரவில் தம்பி அழும் குரல் கேட்டு எழுந்தான் பையன். தம்பி காற்சட்டையில் மலங்கழித்து, புரண்டு அழுக்காகக் கிடந்தான். அப்பா அம்மாவின் அறைக்குச் சென்று எழுப்ப முயற்சி செய்தான். அம்மா ஆழ்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். எழுப்ப வேண்டாம் என்று வேலைக்காரியின் அறையைத் தட்டினான். கதவு மூடியிருந்ததால், சாவி ஓட்டை வழியாகப் பார்த்தான். அப்பா வேலைக்காரியுடன் இசகு பிசகாகப் படுத்திருந்தார். எழுந்து திரும்பி தன் படுக்கைக்குச் சென்று தூங்கினான்.

அடுத்த நாள் காலையில் அப்பாவைப் பார்த்து, “அப்பா எனக்கு அரசியல் புரிந்து விட்டது” என்றான்.

அப்பா, “அடடே .. கெட்டிக்காரன். உன்னுடைய வார்த்தைகளிலேயே உனக்கு அரசியல் பற்றி என்ன புரிந்தது என்று சொல் பார்க்கலாம்” என்றார்.

பையன் சொன்னான். “முதலாளி உழைக்கும் வர்க்கத்தை பலாத்காரம் செய்து அனுபவித்துக் கொண்டிருக்கும் போது, அரசாங்கம் நன்றாகத் தூங்கிக்கொண்டிருக்கிறது. மக்கள் உதாசீனம் செய்யப்படுகிறார்கள். எதிர்காலம் ஒரே மலமாக இருக்கிறது... இதுதான் அரசியல்.”

# பண்பாட்டு விழுமியங்களைப் பேணி சமூகத்தை மேம்படுத்த வேண்டும்

(வடமராட்சி)



அழிவடைந்து வருகின்ற கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்தவாறு எமது சமூகத்தை மேம்படுத்த வேண்டும் என ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், வடமராட்சி வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவிற்கான கலாசார மத்திய நிலைய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு புலோலி - புற்றளைப் பகுதியில் கிராம அலுவலர் மு.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற போது இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், யுத்தம் ஓய்ந்த அமைதிச் சூழலில் தமிழ்மக்கள் சுதந்திரமாகவும், சுபீட்சமாகவும் வாழ்ந்து வருகின்ற போதும், எமது இனத்தின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் அழிவடைந்து வருகின்றன.

ஒவ்வொரு தேசிய இனங்களுக்கும் தனித்துவமான கலை, கலாசார, பண்பாட்டு அடையாளங்கள் உள்ளன. அவ்வாறே எமது தேசியப் பண்பாட்டு அடையாளங்களை அழிவடைய விடுவோமானால் நாம் எமது தனித்துவத்தை இழந்த இனமாக வாழ வேண்டிய துன்பியல் நிலை உருவாகும்.

எனவே இதனை நாம் நன்குணர்ந்தவர்களாக செயலாற்றுவதன் மூலமே அழிவடைந்து வருகின்ற கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பேணிப் பாதுகாக்க முடியுமென அவர் மேலும் தெரிவித்தார்.

முன்பதாக கலாசார மத்திய நிலைய கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் நாட்டி வைத்தனர்.

கலாசார அமைச்சின் 17.5 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வடமராட்சி அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவருமான ஜயாத்துரை சிறிரங்கேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஜெயசீலன், பிரதேச சபை உறுப்பினர் தம்பிராசா மணீதரன், ஓய்வு பெற்ற உதவி அரசாங்க அதிபர் வே.வீரகத்திப்பிள்ளை, ஓய்வுபெற்ற உள்ளூராட்சி மன்ற நூலகர் திருச்செல்வம், கிராமஅலுவலர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## போக்குவரத்து சபை இளைப்பாறிய ஊழியர் யாழில் பேருந்து மோதி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பேருந்து நிலையத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இலங்கைப் போக்குவரத்துச் சபை யாழ்.கொழும்பு சேவை பேருந்தினால் மோதப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ் போதான வைத்தியசாலையில் அவசரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் சிகிச்சை பலனின்றி மரணமானார். பண்டத்தரிப்பு வடலியடைப்பைச் சேர்ந்த நாகலிங்கம் பாலேந்திரன் (வயது 71) என்பவரே நேற்று மரணமடைந்துள்ளார்.

யாழ்.கொழும்பு சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சேவை பேருந்து பயணிகளை ஏற்றுவதற்காக உரிய இடத்திற்கு செல்கையில் பேருந்து முதியவர் மீது மோதியுள்ளது.

இதன் போது முதியவரின் இரண்டு கால்களும் பேருந்தில் அகப்பட்டு நொருங்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து முதியவர் யாழ்.போதனாவைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அவர் நேற்றுக்காலை சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

இவர் இலங்கைப் போக்குவரத்து சபை காரைநகர் டிப்போவின் இளைப்பாறிய ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# மன்னாரில் கடும் வறட்சி; உதவி வழங்க கோரிக்கை

(மன்னார்)

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள ஏனைய மாவட்டங்களுக்கு ஜனாதிபதியினால் வழங்கப்படும் உதவிகளைப் போன்று, கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மன்னார் மாவட்ட மக்களுக்கும் வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் தன்னிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. முகமட் றியாஸ் தெரிவித்துள்ளார்.


மன்னார் மாவட்டத்தில் தற்போது நிலவுகின்ற கடும் வறட்சியால் விவசாயங்கள் பாதிப்படையும் நிலையில் உள்ளன. அதிகமான கிராமங்களில் குடிநீர்த் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. 1400 ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 10,000 இற்கும் அதிகமான மக்களுக்கு குடிநீர்த் தட்டுப்பாடு நிலவிவருகிறது.

மன்னாரின் பிரதான குளமான கட்டுக்கரைக்குளத்தில் நீர் வற்றியுள்ளதால் நன்னீர் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வரும் சுமார் 750 மீனவக் குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

கட்டுக்கரைகுளம் உட்பட 162 குளங்களில் நீர் வற்றி வரண்டு காணப்படுகின்றது. இதன் காரணமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயமும் முற்றாகப் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

60 முதல் 70 நாட்களுக்குள் அறுவடை செய்யவுள்ள நெற்பயிரைப் பாதுகாப்பதற்காக குழாய் கிணறுகளைத் துப்புரவு செய்துதந்து நீர் இறைக்கும் இயந்திரங்களை வழங்குமாறும் விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் விவசாயத் திணைக்களமும் இணைந்து மக்களுக்கு குடிநீரை வழங்குவதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



**மன்னாரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வட மாகாண மேல் நீதிமன்றத்தின் செயற்பாடுகள் நேற்று முன்தினம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. கடந்த ஜூலை மாதம் 16ஆம் திகதி மன்னார் மேல் நீதிமன்ற ஆணையாளராக எஸ்.தியாகேந்திரன் நியமிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் அவர் தனது கடமையைப் பெறுப்பேற்றுக் கொண்டார்.**

# நவீன வசதிகளுடன் புத்துயிர் பெறும் தபாலகங்கள்

## – அஞ்சல் மா அதிபர்

இலங்கை அஞ்சலகம் இன்றைய காலகட்டத்தில் ஏனைய தனியார் தொடர்பாடல் முறைகளை விட அரச சார்பான தபாலகங்கள் உரிய நேரத்துக்கு உரிய இடத்திற்கு சென்றடையக் கூடிய விதங்களில் தபால் மற்றும் தொடர்பாடல் முறைகளை உள்ளடக்கியதான நவீன வசதிகளுடன் புத்துயிர் பெற்றுள்ளதாக இலங்கை அஞ்சல் மா அதிபரிடம் டி.எல்.பி. அபயரத்ன தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியாக அஞ்சல் மேம்பாட்டு வாரம் கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரையும் மாகாணங்கள் ரீதியாக நடத்தப்பட்டது.

இதற்கமைய கரவெட்டி அஞ்சல் அலுவலகத்திலும், கரவெட்டி அஞ்சல் அதிபர் அ.அருளானந்தசோதி தலைமையில் கடந்த 14 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு அனுஷ்டிக்கப்பட்டது. இதில் முதன் முறையாக கரவெட்டி பிரதேச அஞ்சல் அலுவலகத்திற்கு வருகை தந்து பல்வேறு திட்டங்களை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல்களை மேற்கொள்வதாக இருந்தாலும் மக்கள் தபால் சேவையைத்தான் நாடினார்கள். ஆனாலும் மற்றைய சேவைகளுடன் ஒப்பிடும் போது போட்டி போடக்கூடியதாகவும் இருந்து வந்ததுடன், வசதிகளையும் குறைவாகத்தான் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. மேன்மேலும் எமது தபால் நிலையங்களில் சேவைகளை விஸ்தரிப்பதற்கு பல கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது.

இன்று பிரதேச தபால் நிலையங்களில் வங்கிச் சேவை மற்றும் தொடர்பாடல் சேவைகளைத் தனியான துறைகளுடன் போட்டி போடக்கூடிய வகையில் நவீன முறைகளில் சகல சேவைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய வசதிகளில் தபால் அலுவலகங்கள் இயங்கி வருகின்றது. இச்சேவையானது உங்களுக்குரிய பிரதேசங்களில் நிர்வகிக்கப்பட்டு சிறப்பான சேவையை மக்களுக்கு வழங்குகிறது.

இந்த வகையில் மேலதிக கட்டணமின்றி கணினி வலைப்பின்னல் ஊடாக நாட்டின் எப்பாகத்திலும் உடன் அனுப்பி பெறமுடியும். குறைந்த கட்டணத்தில் பக்ஸ் சேவை, உள்நாட்டு, வெளிநாட்டுக்கான பொதிகள் சேவை, தேசிய சேமிப்பு வங்கிச் சேவைகளின் சேமிப்பு வைப்புக்கள், நிரந்தர வைப்புக்கள், சிறுவர் மகளிர் சேமிப்புக் கணக்குகள், ஸ்மைல் சேமிப்புக் கணக்கு, நிரந்தர வைப்புக்கள் மூன்று தொடக்கம் ஐந்து வருடங்கள் தேசிய சேமிப்பு வங்கியை விட அஞ்சலகத்தில் வட்டி வீதம் அதிகரித்துள்ளது.

உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ விரைவான தபால் சேவை, பணப்பரிமாற்றம் ஆகிய சேவைகளை தபால அலுவலகங்களில் மக்களுக்காக வழங்கி வருகின்றது.

கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் உத்தியோகத்தர் பற்றாக்குறையை நீக்கும் முகமாக விரைவில் பலருக்கு நியமனங்கள் வழங்கப்படும் எனவும் தற்சமயம் ஒரு தந்தி தூதுவரை நியமிக்கப் போவதாகவும் உறுதியளித்திருந்தார்.

அத்துடன் கரவெட்டி அஞ்சலகத்தை மேன்மேலும் மெருகூட்டுவதன் முதற்கட்டமாக நெல்லியடி வர்த்தக சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாகவும் நெல்லியடி மையப்பகுதிக்கு கொண்டு சென்று மக்களின் இலகுவான சேவையை பெற்றுக்கொள்ளும் முகமாக வர்த்தக சங்கம் கையளித்த மகஜரின் பிரகாரம் அதனை மக்கள் நடமாட்டம் அதிகரிக்கும் இடமான நெல்லியடி நகரப் பகுதிக்கு மாற்றி இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கரவெட்டி அஞ்சல் அதிபர் அ.அருளானந்தசோதியிடம் உத்தரவிட்டிருந்தார்.

இந்நிகழ்வில் வடபிராந்திய அஞ்சல் மா அதிபரின் என்.ரட்ணசிங்கம், யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஜெயரட்ணம், வவுனியா மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஏ.புஸ்பநாதன், மன்னார் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சின்னப்பு, நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் ரீ.அகிலதாஸ் மற்றும் கரவெட்டி அஞ்சல் அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (116)

தரப்பட்ட எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

54. 304, 182, 1000, 57 ..........................................
55 45, 304, 182, 57 ..........................................
56. 145, 157, 399, 284 ..........................................
57. 1001, 967, 27, 07 ..........................................

**பின்வருவனவற்றிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

58. பின்வருவனவற்றில் வேர் மூலம் இனம் பெருகும் தாவரம் எது?
 1) வாழை 2) கறிவேப்பிலை 3) பூவரசு
59. எண்ணெய் பெறப்பயன்படும் தாவர வகை எது?
 1) சூரியகாந்தி 2) செவ்வந்தி 3) மல்லிகை
60. மனிதனுக்கு உதவும் பறவை எது?
 1) கொக்கு 2) கிளி 3) காகம்
61. தரப்பட்ட தாவரங்களில் ஆணிவேர் அற்ற தாவரம் எது?
 1) புளி 2) மா 3) தென்னை
62. நீரில் மிதக்கக் கூடிய ஓர்பொருள் பின்வருவனவற்றுள் எது?
 1) றெஜிபோம் 2) பனிக்கட்டி 3) மேற்சொன்ன இரண்டும்

**பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.**

63. புகைவண்டியில் பிரயாணம் செய்யும்போது புகைவண்டி நிலையத்தில் பெறவேண்டியது, (நுழைவுச்சீட்டு / பிரயாணச் சீட்டு)
64. ஒரு கடிதத்தை அனுப்புவதற்குத் தபாலகத்தில் பெறவேண்டியது (முத்திரை / காசோலை)
65. வங்கியில் பணம் பெறுவதற்குக் கொடுக்க வேண்டியது (குடும்ப அட்டை / காசோலை)
66. பஸ் நிலையத்தில் இறங்குவதற்குச் செய்ய வேண்டியது (சத்தமிடுதல் / மணி அடித்தல்)
67. இம்மாதம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின், 20ஆம் திகதி என்ன கிழமை (வியாழன் / வெள்ளி)

**பின்வரும் கூற்றுக்குரிய சரியான விளக்கத்தின் கீழ் கீறிடுக.**

68. வெள்ளம் வரும் முன் அணை கட்ட வேண்டும்.
 1. அணை கட்டுகையில் வெள்ளம் வந்தால் உடைந்துவிடும்.
 2. அணை கட்ட வெள்ளம் வரவேண்டும்.
 3. ஆபத்து வருமுன் பாதுகாப்பு மேற்கொண்டு ஆபத்து வராது காத்துக்கொள்ள வேண்டும்.
69. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
 1. முளை இல்லாத பயிர் முளைக்காது. 2. பயிர் முளைக்க நீர் அவசியம்.
 3. எதிர்காலத்தில் ஒருவரது முன்னேற்றம் எப்படி இருக்கும் என அவரது சிறுவயது நடவடிக்கையிலேயே காணலாம்.
70. "நான் விரும்பும் ஆசிரியர்" என்னும் தலைப்பில் கருத்துள்ள ஆறு வாக்கியங்கள் எழுதுக.
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - I
1 மணி

# கல்வி முரசு



இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.

**முதலாவது எண்ணுக்குச் சமமான கணிதச் செய்கை கொண்ட விடையைத் தெரிக.**

01. 24 = i) 22 x 2 ii) 45 - 21 iii) 39 -11
02. 72 = i) 5 x 10 ii) 12 x 6 iii) 8 x 5
03. 54 = i) 63 ÷ 2 ii) 70 - 14 iii) 50 + 4
04. 40 = i) 80 ÷ 2 ii) 40 x 2 iii) 50 - 30
05. 90 = i) 80 + 20 ii) 45 x 2 iii) 100 - 1


**கீழ்வரும் வாக்கியத்திற்கான தனிச்சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

06. கடவுள் இல்லை என்று வாதிப்பவன் - (ஆத்திகன், நாத்திகன், நீதிபதி)
07. கண் பார்வை இல்லாதவன் - (குருடன், ஊமை, செவிடன்)
08. தச்சு வேலை செய்பவன் - (மேசன், இடையன், தச்சன்)
09. ஆடு மேய்ப்பவன் - (பாகன், இடையன், தச்சன்)
10. தாய் தந்தையரை இழந்தவன் - (தபுதாரன், அநாதை, ஊமை)
11. வாசிப்பதற்கு புத்தகங்கள் உள்ள இடம் - (பாடசாலை, கடை, நூலகம்)

**அடைப்பினுள் இருந்து சரியான விடையைத் தெரிந்து புள்ளிக் கோட்டினுள் எழுதுக.**

12. (வழி, வளி, வலி) அஞ்சாமல் தனி..........................................யே போகவேண்டாம்.
13. (வாழை, வாளை, வாலை) கடலில் ..........................................மீன்கள் காணப்படும்.
14. (குழவி, குலவி, குளவி) கல்லால் எறிந்ததும் ..........................................கூட்டிலிருந்து புறப்பட்டது.
15. (உழவு, உளவு, உலவு) ஒற்றன் ..........................................அறிய பகையரசனின் நாட்டிற்குச் சென்றான்.
16. (கழகம், களகம், கலகம்) நாட்டில்.......................................... ஏற்பட்டதால் மக்கள் வெளியேறினர்.

**ஒரு வகுப்பில் உள்ள பத்துப் பிள்ளைகள் தாம் உண்ண விரும்பிய பழங்களைக் கீழே உள்ள உருவில் காட்டியபடி அம்புக்குறியினால் இணைத்துக் காட்டியுள்ளனர். அதன் பிரகாரம் பின்வரும் வினாக்களுக்குரிய விடையை எழுதுக.**



17. பத்துப் பிள்ளைகளிலும் அதிகமானோர் விரும்பும் பழம் யாது?

.......................................................................

18. பத்துப் பிள்ளைகளிலும் ஒருவரும் விரும்பாத பழம் எது?

.......................................................................

19. இரண்டு பழங்களை விரும்புபவர் யார்?

.......................................................................

20. ஒரு பழத்தையும் விரும்பாத பிள்ளை யார்?

.......................................................................

**பின்வரும் கணக்குகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.**

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 21. | 4260 | = | 4000 | + | .................... | + | 60 | + | 0 | | | |
| 22. | 1367 | = | ................ | + | 300 | + | 60 | + | 7 | | | |
| 23. | 9823 | = | 9000 | + | 800 | + | ........ | + | 3 | | | |

**சரியாக எழுதப்பட்ட சொல்லைத் தெரிந்து கோடிடுக.**

24. பூசோலை, பூஞ்சோலை, பூச்சோலை
25. தொழில்சாலை, தொழிற்சாலை, தொழிட்சாலை
26. ஆராய்ச்சி, ஆராச்சி, ஆராட்சி
27. அறுங்காட்சியகம், அருங்காச்சியகம், அருங்காட்சியகம்
28. வயள், வயல், வயழ்

**29 - 33 வரையான வினாக்களில் முதலாம் பகுதியிலுள்ள சொற்கூட்டத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தொடர்புபடுத்துக.**

29. உடல் வளர்ச்சிக்குத் தேவையான உணவுக்கூறு — நுளம்பு
30. கண்ணுக்குத் தெரியாத கிருமி — வாந்திபேதி
31. நீரால் பரவக்கூடிய நோய் — குளோரின்
32. நோய்களைப் பரப்பும் உயிரினம் — நுண்ணங்கி
33. நீரைச் சுத்தமாக்கும் பொருள் — காபோவைதரேற்று

**பின்வரும் ஆங்கிலச் சொற்களின் தமிழ்க் கருத்தை எழுதுக.**

34. Monky - ..................................... 35. Stomach - .....................................

**பின்வரும் தமிழ்ச் சொற்களின் சிங்களக் கருத்தை எழுதுக.**

36. புத்தகம் ..................................... 37. நாய் .....................................

**பின்வரும் பாடலை வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடைதருக.**

வீசி ஆடும் ஊஞ்சலாம்
விண்ணில் ஏறும் ஊஞ்சலாம்
ஆசை அக்கா பாடவே
அன்புத் தங்கை ஆடலாம்.

சோலை மாவில் ஊஞ்சலாம்
தொங்கும் அங்கே காய்களாம்
காலை எட்டி உன்னியே
காய் பறித்து ஆடலாம்.



38. சிறுவர்கள் என்ன விளையாட்டு விளையாடுகின்றார்கள்?

.......................................................................

39. இங்கு பாட்டுப் பாடுபவர் யார்?

.......................................................................

40. ஊஞ்சல் எந்த மரத்தில் கட்டப்பட்டுள்ளது?

.......................................................................

41. ஊஞ்சலை ஆடி மகிழ்பவள் யார்?

.......................................................................

42. ஊஞ்சலை ஆடுபவர் எதைப் பறிக்கிறார்?

.......................................................................

43. பின்வரும் சொற்களுக்குரிய பன்மைச் சொற்களை எழுதுக.
1) நீ - ..................................... 2) பிள்ளை - .....................................

44. பின்வரும் சொற்களுக்கு ஒத்த சொல் தருக.
1) உணவு ..................................... 2) கள்வன் .....................................


45. பின்வரும் சொற்களுக்கு எதிர்ச் சொல் தருக.
1) நன்மை ..................................... 2) நாடு .....................................


46. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய படங்களை வரைக.
1) Tree 2. Fish 3. Book

**கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லை வைத்து நிரப்புக.**


47. காகம் கரையும் என்பது போல் மயில்.....................................
48. மாமாவிற்கு மாமி போல கணவனுக்கு.....................................
49. தேனுக்கு இனிப்பு போல மிளகாய்க்கு.....................................
50. நேற்றைக்கு இன்று போல புதனுக்கு.....................................

**குறியீடுகளும் அவற்றின் அர்த்தங்களும் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன. அதை அவதானித்து குறியீடுகளுக்கான அர்த்தங்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**




51.  .....................................

52.  .....................................

53.  .....................................

# நாடாளுமன்ற கூட்டுக் குழுவிலிருந்து பா.ஜ. உறுப்பினர்கள் வெளிநடப்பு

## தொடரும் 2 ஜி விவகாரம்



(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் விசாரணை தொடர்பாக பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் நிதியமைச்சர் ப.சிதம்பரத்தை விசாரணைக்கு அழைக்க வேண்டும் என்ற பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்ற கூட்டுக்குழுவிலிருந்து பா.ஜ. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளதுடன் குழுவிலிருந்து விலகப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளனர்.


2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கப்பட்டதில் 1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக மத்திய தணிக்கைத்துறை அறிக்கை அளித்தது. இது நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனையடுத்து எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தை முடக்கின. மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் ராசா பதவி விலக நிர்ப்பந்தம் செய்தன. இதனைத் தொடர்ந்து ராசா பதவி விலகினார். ஸ்பெக்ட்ரம் வழக்கில் ராசா, தி.மு.க. எம்.பி. கனி மொழி மற்றும் பல நிறுவனங்களின் இயக்குநர்கள் சிறை சென்றனர். அவர்கள் தற்போது பிணையில் விடுதலையாகியுள்ளனர். இது தொடர்பாக வழக்கு டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றில் நடந்து வருகிறது. ஸ்பெக்ட்ரம் வழக்கில் அப்போது நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரத்திற்கும் தொடர்பு உள்ளது என எதிர்க்கட்சிகள் புகார் கூறி வருகின்றன.

ஸ்பெக்ட்ரம் முறைகேடு தொடர்பாக விசாரணை நடத்த நாடாளுமன்ற கூட்டுக்குழு அமைக்கப்பட்டது. பி.சி.சாக்கோ தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த 30 எம்.பி.க்கள் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் லோக்சபா எம்.பி.க்கள் 20 பேர், ராஜ்யசபா எம்.பி.க்கள் 10 பேர் உள்ளனர். காங்கிரஸ் கட்சி சார்பில் 10 எம்.பி.க்களும் பா.ஜ. சார்பில் 6 பேரும் உள்ளனர்.

நேற்று முன்தினம் 2ஜி ஸ்பெக்ட்ரம் தொடர்பாக அமைக்கப்பட்ட கூட்டுக்குழு, விசாரணைக்கு அழைக்கப்படுபவர்களின் பெயர்களை முடிவு செய்ய இருந்தது. இந்தப் பட்டியலில் பிரதமர் மன்மோகன் சிங், நிதியமைச்சர் சிதம்பரம் ஆகியோரது பெயரைச் சேர்க்க வேண்டும் என பா.ஜ. வலியுறுத்தியது. மறுக்கும் பட்சத்தில் குழுவிலிருந்து வெளிநடப்பு செய்வோம் என மிரட்டல் விடுத்தது. வழக்கு விசாரணை நேர்மையாக நடைபெற பிரதமர் மன்மோகன் சிங், சிதம்பரம் ஆகியோரை அழைப்பது அவசியம் என கூறியது. ஆனால் பிரதமர் மற்றும் நிதியமைச்சர் பெயர்களைச் சேர்ப்பதற்கு காங்கிரஸ் கட்சி சார்பில் மறுப்பு தெரி வித்து வந்தது. உயர் பதவிகளை விசாரணைக்கு அழைப்பது என்றால், பா.ஜ. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் இடம் பெற்றவர்களையும் வாஜ்பாயையும் அழைக்க வேண்டும் எனக் கூறியது.

நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில் பா.ஜ.வின் ஜஸ்வந்த் சிங், யஷ்வந்த் சின்ஹா, தர்மேந்திரா பிரதான், ரவிசங்கர் பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் பா.ஜ. கோரிக்கை நிராகரிக்கப்பட்டதையடுத்து பா.ஜ. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

# ஜனாதிபதித் தேர்வை எதிர்த்து சங்மா நீதிமன்றில் மனுத் தாக்கல்



ஜனாதிபதித் தேர்தலில் பிரணாப் முகர்ஜியின் வெற்றி செல்லாது என்று, அவரை எதிர்த்துப் போட்டியிட்டு தோல்வியடைந்த பி.ஏ.சங்மா நேற்று முன்தினம் உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார்.

ஆனால் அதற்கு முன்னதாகவே பிரணாப் முகர்ஜி கேவியட் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில், தனக்கு எதிராக சங்மா அளிக்கும் மனுவின் நகல் மற்றும் தேவையான ஆவணங்களின் நகலை அளிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இதுபற்றி நீதிமன்ற பதிவாளர் மூலம் அறிந்த சங்மாவின் வழக்கறிஞர் சத்யபால்ஜெயின், இது தங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்தார். மேலும் இந்த மனு கோரிக்கை தானே தவிர இடைக்கால உத்தரவு அளிக்ககோரும் மனு, அல்ல என்றும் அவர் கூறினார். இதனை பிரணாப் முகர்ஜியின் அலுவலகமும் உறுதி செய்தது. ஆனால் மேற்கொண்டு எந்த விவரங்களையும் தெரிவிக்கவில்லை.




# வடமாநிலங்களில் பலத்த மழை; வெள்ளத்தில் மூழ்கி 12 பேர் பலி

(புதுடில்லி)

வடமாநிலங்களில் பெய்து வரும் பலத்த மழைக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் 12 பேர் பலியாகி உள்ளனர். வடமாநிலங்களில் பெய்து வரும் பலத்த மழையால், பல பகுதிகளிலும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக, பல பகுதிகளிலும் பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. பலத்த மழை காரணமாக, ராஜஸ்தான் மாநில தலைநகர் ஜலந்தரில் பத்து பேரும், தவ்சா மாவட்டத்தில் இருவரும் என மொத்தம் 12 பேர் பலியாகினர். இதுகுறித்து தகவல் கிடைத்ததும், பிரதமர் மன்மோகன் சிங் தொலைபேசி மூலம் ராஜஸ்தான் மாநில முதல்வர் அசோக் கெலாட்டை தொடர்பு கொண்டு, மாநிலத்தில் மழை சேதங்கள் குறித்து கேட்டறிந்தார். ஜெய்ப்பூரில், தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் 300 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

காஷ்மீர் மாநிலத்தில் நீடித்து வரும் தொடர் மழையால், பந்தல்போரா மாவட்டத்தில், பாகிஸ்தான் எல்லையையொட்டி, எல்லைப் பாதுகாப்புப் படையினரின் முகாம் மற்றும் எட்டு வீடுகள் மழை நீரால் அடித்துச் செல்லப்பட்டன. மேலும், ஐந்து எல்லை பாதுகாப்பு படையினரும் காயமடைந்துள்ளனர். மேலும்,. ஒரு வீரரை காணவில்லை. இவ் வீரரை தேடும் பணி தொடர்ந்து வருகிறது.

# பாதிக்கப்பட்டோருக்காக கோஷமிடும் திரைப்பட நடிகர் கார்த்திக்

சிவகாசியில் இடித்த வீடுகளை மீண்டும் கட்டித்தர வேண்டும் என நடிகர் கார்த்திக் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிவகாசி சிறுகுளம் கண்மாய் பகுதியில் ஏராளமான வீடுகள், கடைகள் ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்தன. அந்த வீடுகளை இடிக்க எதிர்ப்பு தெரிவித்து அந்தப் பகுதியில் வசித்து வந்த முச்சக்கரவண்டி சாரதியாக கணேசன் என்பவர் தனது வீட்டு மொட்டை மாடியில் ஏறி நின்றுகொண்டு உடலில் பெட்ரோலை ஊற்றி தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார்.

இதைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பு அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு நடிகர் கார்த்திக் சிவகாசி சென்றார். தீக்குளித்து தற்கொலை செய்து கொண்ட கணேசனின் வீட்டுக்கு சென்று அவரது குடும்பத்துக்கு ஆறுதல் கூறி ரூபா 50 ஆயிரம் நிதியுதவி வழங்கினார். பின்னர் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் கார்த்திக் பேசுகையில்,



இந்தப் பகுதியில் உள்ளவர்கள் மிகவும் ஏழ்மையானவர்கள். 40 ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களை இங்கிருந்து அகற்ற நினைப்பது தவறு. இவர்கள் அனைவரும் தான் வாக்கு போட்டார்கள். அதனால் அவர்களுக்கு உதவ வேண்டும். எனக்கு முதலமைச்சர் ஜெயலலிதா மீது எப்போதும் ஒரு மதிப்பு உண்டு. இந்தச் சம்பவம் குறித்து அவருக்கு சரியான தகவல் கூறப்படவில்லை என்று நான் நினைக்கிறேன் என்றார்.

## தனித்துவத்தை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

குறிப்பாக விவசாயிகள் கூட்டான தீர்மானங்களை மேற்கொண்டு அரச நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கல், அந்த ஆலோசனைகளை அதிகாரிகள் செவிமடுத்தல் என்கிற விடயங்களும் புறக்கணிக்கப்பட்டிருப்பதே இதற்கான பிரதான காரணிகளாகும்.

இதனால் ஏற்பட்டிருக்கும் பிரதான விளைவு உதவிகளை வழங்குவதற்கான முறையான பயனாளி தெரிவை மேற்கொள்ள முடியாதிருப்பதுடன், கூடுதல் விவசாயிகளின் விருப்பங்களுக்குப் புறம்பாக இவ்வுதவிகள் முறைகேடாக வழங்கப்படும் ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகும்.

மொத்தமாக நிலைமைகளை நோக்கும் போது விவசாயிகள் சமூகம் தன்னை தலைநிமிர்த்திக் கொள்வதற்கு தனது உற்பத்தி சார்ந்து தம் வாழ்வுக்கும் இருப்புக்குமாக இந்த விவசாயத் தொழிலில் தம்மை முழுமையாக கால்பதித்துக் கொள்ளும் நிலையை வலுப்படுத்திக் கொள்ள முடியாதிருப்பது கவனத்திற்குரியது.

தத்தமது பிரதேசம் சார்ந்து தமது உற்பத்தி முயற்சிகளைப் பின்னடையச் செய்யும் அனைத்து அகபுற காரணிகளையும் விவசாயிகள் முறையாக இனங்காண்பதுடன், அவற்றைத் தவிர்ப்பதற்கான திட்டங்களை அரசுத் தலைவர்கள் மற்றும் துறைசார்ந்த அரச நிறுவனங்கள் மூலம் முன்னெடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளப்படுவதும் அவசியமான செயற்பாடாகும்.

இதற்கு வசதியாக எமது விவசாயிகள் தமக்கான பரந்துபட்ட அமைப்புக்குள் தம்மை உட்படுத்திக் கொள்வதுடன், தமது தேவைகள் பிரச்சினைகளை கூட்டாக முன்வைக்கும் ஒரு வெளிப்படையான சூழலை உருவாக்குவதின் மூலமே விவசாயிகள் தமக்கான மேன்நிலையை அடைந்து கொள்ள முடியும்.


## வாழ்க வளமுடன்



தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்


பெயர் : ஜெ. சாரங்கன்

முகவரி: சரவணை மேற்கு வேலணை

அகவை 10 இல்

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

# கென்யாவில் இன மோதல்; 48பேர் உயிருடன் எரித்துக்கொலை



கென்யாவில் இரண்டு இனக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 48 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இது குறித்து அந்நாட்டு பொலிஸார் தெரிவிக்கையில்; பொகோமோ மற்றும் ஓர்மா எனும் இரண்டு இனக் குழுக்களுக்கு இடையே தானா நதி மாவட்டத்தில் மோதல் ஏற்பட்டது.

இது ஒரு மோசமான சம்பவமாகும். கொல்லப்பட்டவர்களில் 31 பேர் பெண்கள், 11 குழந்தைகள், 6 ஆண்கள் அடங்குகின்றனர்.

பலியானவர்களில் 34 பேர் கண்டதுண்டமாக வெட்டப்பட்டுள்ளனர். சம்பவம் நடந்த இடம் கென்யத் தலைநகர் நைரோபியிலிருந்து 300 கி.மீ. தொலைவில் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதே மாவட்டத்தில் கடந்த 2001இல் ஏற்பட்ட கலவரத்தில் 130 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிரியப் போரால் லெபனானிலும் மோதல்



சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்தின் ஆதரவுப்படையினருக்கும், சன்னி முஸ்லிம் பிரிவு போராட்டக்காரர்களுக்கும் இடையே நடக்கும் சண்டை உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தப்போரின் விளைவாக பக்கத்து நாடான லெபனானில் உள்ள சிரிய ஜனாதிபதி ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையே மோதல் மூண்டது.

இதனை இராணுவத்தினர் தடுக்க முயற்சித்தும், பலனளிக்காமல் துப்பாக்கிச்சண்டை இடம்பெற்றுள்ளது. இந்த மோதலில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டனர். 100இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந் துள்ளனர்.

மேலும் பதட்டப்பகுதியான இந்த மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தும், அதை யாரும் பொருட்படுத்தவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒசாமாவைக் கொல்ல உதவியளித்த பாகிஸ்தான்



ஒசாமா பின்லேடனை கொலை செய்யும் முயற்சியில், அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ.யை சேர்ந்த அதிகாரி ஒருவர் உதவியதாக தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் அல்கொய்தா இயக்கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன் கடந்தாண்டு மே மாதம் அமெரிக்க அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்னதாகவே, பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஷ்பக பர்வேஸ் கயானிக்கு அமெரிக்கா மறைமுகமாக தகவல் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

வால் ஸ்ட்ரீட் ஜேனல் மற்றும் வொஷிங்டன் போஸ்ட் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றிய, ரிச்சர் மினிடெர் என்ற அமெரிக்க நிருபர் எழுதியுள்ள நூலில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.


அதில், பாகிஸ்தானின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள ஒசாமா பின்லேடன் குடும்பத்தாருடன் பதுங்கியிருந்த தகவலை, ஐ.எஸ்.ஐ அதிகாரி ஒருவரின் மூலமாக அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவினர் தெரிந்து கொண்டனர்.

ஒசாமாவை சுட்டுக் கொல்வது குறித்து 2010ஆம் ஆண்டு இறுதியில், பாகிஸ்தான் இராணுவத் தளபதி கயானிக்கு மறைமுகமாக தகவல் தெரிவித்து அதிகாரபூர்வமற்ற முறையில் அவரின் ஒப்புதலை யும் அமெரிக்கா பெற்றது.

எனினும் பாகிஸ்தானுக்கு தெரியாமலேயே அதிரடிப் படையினரின் தாக்குதலை அரங்கேற்றலாம் என்ற முடிவை கடந்தாண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி ஜனாதிபதி ஒபாமா மேற்கொண்டார் எனக் கூறப்பட்டுள்ளது.

# ஒபாமாவுக்கு கொலை மிரட்டல்; காட்டிக்கொடுத்தது மின்னஞ்சல்

(வொஷிங்டன்)



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் மின்னஞ்சல் மூலம் மிரட்டல் விடுத்துள்ளார். உடனே அந்த முகவரி கண்டுபிடிக்கப்பட்டு உளவுத்துறை அதிகாரிகள் மற்றும் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை அவரது வீட்டைச் சோதனையிட்டனர்.

மிரட்டல் விடுத்தவர் கைது செய்யப்பட்டதாகவும் அப்போது அவரிடம் ஆயுதம் இருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் அமுலாக்கத்துறையினர் அவரது வீட்டைச் சோதனையிட்டதில், 2 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

# தண்ணீரில் பறக்கும் விமானம்

(வொஷிங்டன்)

கடல், தரை மற்றும் பனிப்பிரதேசத்தில் பறக்கும் விமானத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் தயாரித்து புதிய சாதனை படைத்துள்ளனர். அமெரிக்காவின் லிசா அகோயா என்ற நிறுவனம் அதி நவீன விமானத்தை வடிவமைத்துள்ளது.

இந்த விமானம் தரையில் பறக்கும் போது அதன் 2 இறக்கைகள் விரியும். தண்ணீரில் பறக்கும் போது அது படகு போன்று மாறும்.

அதே நேரத்தில் பனிப் பிரதேசத்தில் செல்லும் போது அதன் 2 இறக்கைகளும் பனிக்கட்டிகளை உடைத்து நொருக்கி சீரமைத்து அதில், பயணிக்கச் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் 2 பேர் மட்டுமே பயணம் செய்ய முடியும். இதில் 2011 கிலோ மீற்றர் தூரம் பயணம் செய்ய முடியும். மணிக்கு 135 மைல் முதல் 155 மைல் வேகத்தில் பறக்கும் திறன் படைத்தது.

இன்னும் 2 ஆண்டுகளில் அதாவது 2014ஆம் ஆண்டு ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் இது விற்பனைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னதாக இந்த விமானங்கள் 70 தடவை வெற்றிகரமாக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டுள்ளது. இதன் விற்பனை கண்காட்சி அமெரிக்காவின் வின்கான்சின் மாகாணத்தில் உள்ள ஒஸ்காஷ் ஏர்வென்ஞ்சர் நிறுவனத்தில் கடந்த மாதம் நடந்தது குறிப்பிடத்தக்கது.

# ஈரான் மீதான நிதிசார் தடை; தளர்த்தியது அமெரிக்க அரசு



(வொஷிங்டன்)

ஈரான்மீது விதிக்கப்பட்டுள்ள நிதிசார் தடைகள் சிலவற்றை தற்காலிகமாகத் தளர்த்துவதற்கு அமெரிக்கத் திறைசேரி முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈரானுக்கு நிதி உதவிகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஈரானில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிதி உதவிகளை அனுப்பி வைக்கும் நோக்கில் அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


அமெரிக்கா ஈரானுக்கு எதிராகத் தடை விதித்திருந்தாலும், மனிதாபிமான அடிப்படையில் உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகள் போன்றவற்றை அனுப்பி வைப்பதற்கான வாய்ப்புக்கள் நிலவுகின்றன. எனினும், தடை அமுலில் உள்ள சந்தர்ப்பத்தில் நிதிசார் உதவிகளை வழங்கமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில், மனிதாபிமான அடிப்படையில் ஈரானுக்கு நிதி உதவிகளை வழங்கும் நோக்கில் தடைகள் தற்காலிகமாகத் தளர்த்தப்படவுள்ளன.

இதேவேளை, வெளிநாடுகளின் உதவிகளைத் தாம் எதிர்பார்க்கவில்லை என ஈரான் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இருப்பினும், நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதில் ஈரான் அரசாங்கம் துரித கதியில் செயற்படவில்லை என விமர்சனம் வெளியிடப்பட்டுள்ளது. அண்மையில் ஈரானில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் சிக்கி 300இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்ததுடன், ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஈரானின் சர்ச்சைக்குரிய அணுத்திட்ட நடவடிக்கைகளினால் அமெரிக்கா அந்நாட்டின்மீது தடை விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சையில் எரிவாயுத் தீவு; மீன்பிடிப்போர் விரட்டியடிப்பு



சீனாவும், ஜப்பானும் உரிமை கொண்டாடும் சர்ச்சைக்குரிய தீவில் மீன் பிடிக்கச்சென்றவர்கள் விரட்டியக்கப்பட்டனர்.

சீனாவுக்கும், ஜப்பானுக்கும் இடையே உள்ளது ஷென்காகு தீவு. இந்தத்தீவை சீனா டையாயூ என்றழைக்கிறது. பண்டைக் காலம் தொட்டு இந்தத்தீவு தங்கள் எல்லைக்குட்பட்டு இருப்பதாக சீனாவும், கடந்த 1890ஆம் ஆண்டு முதல் இந்தத் தீவு தங்கள் வசம் இருப்பதாக ஜப்பானும் உரிமை கொண்டாடி வருகின்றன.

சர்ச்சைக்குரிய இந்தத்தீவில் மனித நடமாட்டம் கிடையாது. இந்தத்தீவைச் சுற்றிலும் எரிவாயு அதிகம் கிடைப்பதால் சீனா இந்தப் பகுதியைப் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

இதற்கிடையே ஜப்பானிய ஆதரவாளர்கள் 150 பேர் இரண்டு நாட்களுக்குமுன் இந்தத் தீவுக்குச் சென்றனர். 10 பேர் மட்டும் தீவுக்குள் சென்று, அங்கு ஜப்பானியக் கொடிகளை பறக்க விட்டனர். ஜப்பானிய கடலோர காவல் படையினரும் இவர்களைத் தடுக்கவில்லை.

சர்ச்சைக்குரிய தீவில் ஜப்பானிய ஆதரவாளர்கள் சென்று அவர்கள் நாட்டுக் கொடியை பறக்க விட்டிருப்பதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

பீஜிங், ஷாங்காய் ஆகிய நகரங்களில் உள்ள ஜப்பானிய தூதரகத்திற்கு வெளியே சீன ஆதரவாளர்கள் ஜப்பானுக்கு எதிராக கோஷமிட்டனர். கடந்த வாரம் இந்தத் தீவுக்குச்சென்று தங்கள் உரிமையை நிலை நாட்ட முயன்ற ஹொங்கொங்கை சேர்ந்த 14 பேரை ஜப்பான் கைது செய்தது. பின் நேற்று முன்தினம் இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை சில மீனவர்கள் சர்ச்சைக்குரிய இந்தத் தீவில் சுறா மீன்களை பிடிப்பதற்காக வந்தனர். அங்கிருந்த இரு நாட்டு கடலோர பொலிஸார் இவரகளை விரட்டியடித்தனர்.

# தொடரும் கடும் வறட்சி 1200 ஏக்கர் பயிர்கள் அழிவு

(கிளிநொச்சி)

நாட்டில் நிலவிவரும் கடுமையான வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த யூலை மாதம் வரையான காலப்பகுதியில் 1200 ஏக்கர் வரையிலான நெற்செய்கை முற்றாக அழிவடைந்துள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாய விரிவாக்கல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் நிலவிவரும் வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்டிருந்த நெற்செய்கை மற்றும் சிறுதானியப் பயிர்ச்செய்கை என்பன பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக நாட்டின் வெப்பத்துடன்கூடிய காலநிலை 30 இலிருந்து 32 பாகை செல்சியஸாக இருந்தது. ஆனாலும் இம்முறை இந்த வெப்பத்துடன்கூடிய காலநிலை 34 செல்சியஸாக உயர்ந்துள்ளது. இதுவே நாட்டில் வறட்சி பெருமளவில் ஏற்படுவதற்கு காரணமாகும்.

அத்துடன் வறட்சியினால் ஏற்பட்ட பாதிப்புகள் ஒரு புறமிருக்க காலம் பிந்திய விதைப்புக்களும் இந்த பயிரழிவு ஏற்படுவதற்கு காரணமாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக செய்கை அறுவடையின்போது ஒரு ஏக்கருக்கு 90 புசல் வீதம் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தற்போது 1200 ஏக்கர் பயிர்கள் அழிவடைந்துள்ளதால் ஒரு இலட்சத்து எண்ணாயிரம் புசல் விளைச்சல் குறைவடையும். இந்தத் தொகை மேலும் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

அத்துடன் மாவட்டத்தில் 50 - 75 வீதமான பயிரழிவு 143 ஏக்கரிலும் 25 - 50 வீதமான பயிரழிவு 98 ஏக்கரிலுமென கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நீர் வீண் விரயமாவதை தடுப்பதற்கான முயற்சிகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தாமையும் இந்தப் பயிரழிவிற்கான காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதாவது குளங்களின் நீர் மட்ட அளவை முன்கூட்டியே கணக்கிலெடுத்து அதற்கமைய சிறுபோக நெற்செய்கையை குளங்களை அண்மித்த வயல் பிரதேசங்களில் மேற்கொள்ளும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் நீர் வீண் விரயமாவதைக் குறைத்து பயிரழிவைக் குறைத்திருக்கலாமெனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (29)

# 'உதயன்' ஆசிரியருக்கு எதிரான வழக்கு நீதிச்சேவை ஆணைக்குழுவுக்கு அறிக்கை

(திருநெல்வேலி)

உதயன் ஆசிரியருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக ஆராய்வதற்காக இலங்கை நீதிபதிகள் சங்கத்தின் விசேட நிறைவேற்றுக் குழுக் கூடம் நாளை நடைபெறவுள்ளது.

இலங்கை நீதிபதிகள் சேவைச் சங்கத்தின் செயலாளர் பிரதீப் ஜயதிலக இக்கூட்டத்திற்கு தலைமை தாங்குவார்.

இவ் அவமதிப்புக் குற்றச்சாட்டு தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கும் அதனடிப்படையில் அறிக்கை ஒன்றை பிரதம நீதியரசரிடமும் சமர்ப்பிப்பதற்கும், எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது தடுப்பதற்கும் இக்கூட்டம் கூட்டப்படுகின்றது.

ஏற்கனவே இலங்கை நீதிபதிகள் சங்கம் உதயன் ஆசிரியருக்கு எதிராக கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவ்அவமதிப்பு தொடர்பான சகல ஆவணங்களும் இலங்கை நீதிபதிகள் சேவைச் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (137,பா)

# அநாகரிகச் செயலுக்கு கண்டனம்

உள்ளூராட்சி சபைகளின் உட்கட்மைப்பு வசதிகளை மேம்படுத்தும் செயல்திட்டத்தின் கீழ் வலி. தெற்குப் பிரதேச சபைக்கான புதிய கட்டடம் அமைக்கப்பட்டது.

அக்கட்டடத்தின் மீது கடந்த 22.07.2012 ஆம் திகதி அதிகாலை அளவில் அநாகரிகமான முறையில் கழிவு ஓயில் ஊற்றப்பட்டதை எதிர்க்கட்சியினர் சார்பாக வன்மையாகக் கண்டிக்கும் அதேவேளை, மேற்படி கட்டடத்திற்கான ஆரம்ப விழா சம்பந்தமாக சபை அங்கத்தவர்கள் அழைக்கப்பட்டு எந்தவித தீர்மானமும் நிறைவேற்றப்படாமல் ஆரம்ப விழாவை தவிசாளர் தன்னிச்சையாக ஏற்பாடு செய்து அதற்கான அழைப்பிதழ்களை உறுப்பினர்களாகிய எமக்கு அனுப்பிய பின்னரே எமக்கு அறியக்கூடியதாக இருந்தது.

இந்நிலையில் இதை நோக்குகின்ற போது இந்த விழாவானது உள்நோக்கம் கொண்ட செயலாகவே கருதத்தோன்றுகின்றது.

அத்தோடு கடந்த மாதம் 27.06.2012 ஆம் திகதி நடைபெற்ற சபைக்கூட்டத்திலோ, அதற்கு முன்னர் நடைபெற்ற சபைக் கூட்டங்களிலோ, விசேட கூட்டங்களிலோ கட்டட செயற்பாடுகளை ஆரம்பித்தல் சம்பந்தமாக கலந்துரையாடப்படவில்லை என்பதாலும், நாம் இந்த நிகழ்வுக்கு கலந்து கொள்ளவில்லை என்பதை தெரிவித்துக் கொள்வதோடு, இவ்அநாகரிக சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை வழங்கப்படவேண்டும் என சுன்னாகம் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



செல்வச்சந்நிதி உற்சவகால பிரதேச செயலக பணிமனையில் உறக்கநிலையில் அலுவலர். காத்திருக்கிறார் சேவை பெற வருகைதந்தவர். (116)

# ஐ.நா. பிரதிநிதிக்கு அரசு ஒத்துழைப்பு வழங்கும்

(கொழும்பு)

விரைவில் கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரதிநிதிகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என வெளிவிவகார. அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தொழில்நுட்ப பிரதிநிதியொருவர் விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். சகல வளங்களையும் திரட்டி குறித்த பிரதிநிதிக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும். நிலைமைகளை நேரில் பார்வையிடுவதற்கு எந்த பிரதேசத்திற்கு வேண்டுமானாலும் செல்ல முழுமையான சுதந்திரம் அளிக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பல ஆண்டுகளுக்கு முன்னதாகவே கோரியிருந்தோம். எனினும், கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை பிரசுரமானதன் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்வதாக நவநீதம்பிள்ளை அறிவித்திருந்தார்.

தற்போது இலங்கைக்கு விஜயம் செய்ய விரும்புவதாக நவநீதம்பிள்ளை அறிவித்துள்ளார். அவரது இலங்கை விஜயத்திற்கு தேவையான சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## ஆனையிறவில்...

குடும்பமும் மீள்குடியமர்விற்கான பதிவுகளை மேற்கொள்ளாத நிலையில் மக்கள் பதிவினை மேற்கொண்டு விட்டு காத்திருப்பதாக கூறுவது எவ்வகையில் நியாயமானது.

அத்துடன் கடற்படையினர் கேட்ட காணியை வழங்குவதற்கான அனுமதியைக் கூட பிரதேச செயலகம் இதுவரை வழங்கவில்லை.

எனவே பொய்யான செய்திகள் குறித்து கண்டாவளை பிரதேச மக்கள் குழப்பமடையத் தேவையில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தொழில்...

இச்சந்திப்பின் போது அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் திருமதி ஜெகராசசிங்கம், அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா, தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் புத்தி கீர்த்திசேன ஆகியோர் உடனிருந்தனர்.

## அரசு....

இரு தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் எனவும் இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது விரிவாக ஆராயப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நகரில்...

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் இரண்டு கால்களிலும் படுகாயமடைந்த குறித்த வயோதிபர் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமடைந்தார். (பா)

(இது குறித்த மற்றுமொரு செய்தி 14 ஆம் பக்கத்தில்)

# நியமனத்தில் புறக்கணிப்பு ஆணைக்குழுவில் முறையீடு

பட்டதாரிகளுக்கான அரச நியமனத்தில் தாம் புறக்கணிக்கப்பட்டமை தொடர்பாக வவுனியா மாவட்ட உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் வவுனியா மாவட்ட மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பார் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெற்ற பட்டதாரிகள் 22 பேர் வவுனியா மாவட்டத்தில் உள்ளனர். அண்மையில் அரசால் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் நியமனத்தில் இவர்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்திலும் இத்தகைய பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. இதனை ஆட்சேபித்து நேற்று முன்தினம் மதியம் மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்திற்குச் சென்ற டிப்ளோமாப் பட்டதாரிகள் வவுனியா மாவட்ட இணைப்பாளர் றோகித்த பிரியந்தவிடம் தமது முறைப்பாட்டைக் கையளித்தனர்.

கிழக்கு மாகாணத்தில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் பட்டதாரிப் பயிலுநர்களாக உள்வாங்கப்பட்டுள்ளார்கள். ஆனால் வடக்கு மாகாணத்தில் மட்டும் ஏன் அவ்வாறு இடம் பெறவில்லை? பட்டதாரிப் பயிலுநர் நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், ஏற்கனவே ஒப்பந்த அடிப்படையில் செய்து வந்த வேலைகளை சிலர் கைவிட்டுள்ளனர்.

இதனால் தற்போது தொழில் இழந்தவர்களாக உள்ளனர் என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# அமைச்சர் விமல் மருத்துவமனையில்

அமைச்சர் விமல் வீரவன்ஸ நேற்றுக் காலை மாரடைப்பு காரணமாக குருநாகலை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மாகாணசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்திற்கு கலந்துகொள்வதற்காக திருகோணமலைக்கு செல்லும் வழியிலேயே இவர் சுகவீனமடைந்துள்ளார்.

## அகாஷியின்....

முடியாது என குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த நாட்களில் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை முறிந்து விட்டதாக செய்துவந்த பிரசாரங்களின் பின்னால் உள்ள சூழ்ச்சி தற்போது புரிகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு இடையில் வெளிநாட்டு மத்தியஸ்தர் ஒருவரை இணைத்துக் கொள்ளவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே திட்டமிட்டிருந்ததாக அவர் தெரிவித்துள்ளார். எனவே எந்த நிலையிலும் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளுக்கு வெளிநாட்டு மத்தியஸ்தர் ஒருவரை இணைத்துக் கொள்ள வேண்டாம் என்று தாம் அரசாங்கத்திடம் கோருவதாகவும் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

## பெண் சட்டத்தரணி...

அறைந்துள்ளார். இதனால் நிலைதடுமாறிய சட்டத்தரணி படிகளில் விழுந்துள்ளார். நீதிமன்றுக்கு வந்திருந்தவர்கள் இத்தாக்குதலைப் பார்த்து பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள்.

இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் மா.கணேசராஜா பொலிஸாருக்கு உத்தரவிட்டார். பொலிஸார் இப்பெண்ணை கைதுசெய்தனர்.

இப்பெண் அவரது கணவனினால் உளவியல் ரீதியாகப் பாதிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தரணி இளங்கோவனைத் தாக்கிய பெண்ணை தெல்லிப்பழை மனநோய் வைத்தியசாலையில் அனுமதித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (137,பா)

## மணல்...

சபை தவிசாளரின் அத்துமீறிய செயற்பாட்டையும் உழவு இயந்திர உரிமையாளர்கள் மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்கள் கண்டித்தனர்.

இதன்போது பிரதேச சபை தவிசாளருடன் கைகலப்பு ஏற்படுமளவுக்கு நிலைமை சென்றதையடுத்து அங்கிருந்த பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் காரைநகர் அமைப்பாளருமாகிய கண்ணன் அவர்களை சமாதானப்படுத்தி அனுப்பியதுடன், இது தொடர்பான முடிவை பிரதேச சபையின் அடுத்த கூட்டத்தொடரில் பெற்றுத்தருவதாகவும் உறுதியளித்தார்.

# புலிகளின் நிதி மூலங்களை முடக்க சட்டத்தில் புதிய திருத்தம்

விடுதலைப் புலிகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிதி சேகரிப்பதைத் தடுக்கும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு தகவல் ஊடக அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும தகவல் தெரிவிக்கையில்,

பயங்கரவாதிகளுக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தடுப்பதற்குத் தேவையான சட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. உள்நாட்டில் ஒரு சட்ட அமைப்பு இல்லாமல் பயங்கரவாதிகளுக்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளைத் தடுத்த நிறுத்த முடியாது.

ஜீ-7 நாடுகளின் நிதி செயற்பாட்டுக் குழுவின் சிபாரிசுகளுக்கு இணங்க பயங்கரவாதிகளின் நிதிகளை முடக்கும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டவிதிகளை மீளாய்வு செய்து மறுசீரமைக்க வேண்டும் என்ற வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது என்றும் அமைச்சர் கூறினார்.

# வறட்சி காரணமாக தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)

தொடர்ச்சியாக நிலவும் வறட்சி காரணமாக இலங்கையின் தேயிலை உற்பத்தி ஜுலையில் தொடர்ந்து 6 ஆவது மாதமும் வீழ்ச்சி கண்டுள்ளது என தேயிலை சபை அறிவித்துள்ளது.

ஜுலை மாத தேயிலை உற்பத்தி 4.2 சதவீதம் வீழ்ச்சிகண்டு 24.11 மில்லியன் கிலோகிராம் ஆகியது.

தேயிலை உற்பத்திக்கான செலவும் அதிகரித்துள்ளது. உற்பத்தி குறைந்தமையால் தேயிலை தொழிற்சாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. முதலில் 2012 இல் 330 மில்லியன் உற்பத்தி கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வறட்சி காரணமாக 325 மில்லியன் அளவில் தான் கிடைக்கும் என தற்போது எதிர்பார்க் கப்படுகின்றது. உற்பத்தி குறைந்தாலும் கூடிய விலை கிடைப்பதால் சென்ற வருடம் கிடைத்த வருமானமான 1.5 மில்லியன் அமெரிக்க டொலரைவிடக் கூடுதலான வருமானம் இவ் வருடம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# தொண்டர் ஆசிரியர் சம்பளம் 6000 ரூபாவாக அதிகரிப்பு

கல்வி அமைச்சின் கீழ் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களின் மாதாந்தச் சம்பளத்தை 6000 ரூபாவாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலளார் சந்திப்பு, தகவல் ஊடக அமைச்சில் நேற்றுக் காலை நடைபெற்றபோதே அவர் இவ்வாறு கூறினார். இங்கு அமைச்சர் மேலும் தகவல் தெரிவிக்கையில்:

நாடு முழுவதிலும் உள்ள அரசாங்கப் பாடசலைகளில் தற்போது 47 ஆயிரம் தொண்டர் ஆசிரியர்கள் பணி புரிகின்றனர். இவர்களுக்கு மாதாந்த சம்பளமாக மூவாயிரம் ரூபா வழங்கப்படுகின்றது. இவர்கள் தமது தற்காலிக நியமனத்தை நிரந்தரமாக்கிக் கொள்வதற்காக ஆசிரியர் பயிற்சி நற்சாட்சிப் பத்திரம் அல்லது பட்டதாரிச் சான்றிதழை சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

எனவே இவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வகை செய்யும் வகையில் அவர்களின் மாதாந்தச் சம்பளத்தை 3000 ரூபாவிலிருந்து 6000 ரூபாவாக அதிகரிக்க வேண்டுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்த ஆலோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வயோதிப மாது மரணம் சடல பரிசோதனைக்கு உத்தரவு

காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அன்றே மரணமானார். காரணத்தைக் கண்டறிய சடல பரிசோதனையும் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி விவேகானந்த நகரைச் சேர்ந்த வெ.தெய்வானை (வயது-70) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு மரணமானார். இவர் கடந்த 20 ஆம் திகதி வீட்டில் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதை அடுத்து உறவினர்களினால் 21 ஆம் திகதி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இந்நிலையில் அவர் மேலதிக சிகிச்சையின் நிமிர்த்தம் அங்கிருந்து நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். இந்நிலையிலேயே அன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு அவர் மரணமடைந்துள்ளார்.

இவரது மரணம் குறித்து அறிவதற்காக நேற்றுச் சடல பரிசோதனை மேற்கொள்ளுமாறு திடீர் மரண விசாரணை அதிகாரி உத்தரவிட்டதனை அடுத்து சடல பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது. (பா)

# மாலைதீவின் ஜனாதிபதி இலங்கை வந்தார்



மாலைதீவின் புதிய ஜனாதிபதி மொஹமட் வஹீட் இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று இலங்கையை வந்தடைந்தார். பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் உள்ளிட்ட அரச முக்கியஸ்தர்கள் மாலைதீவு ஜனாதிபதியை வரவேற்றனர். இந்த விஜயத்தின் போது இலங்கை - மாலைதீவு ஆகிய நாடுகளின் இருதரப்பு உறவை வலுப்படுத்தும் நோக்கில் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைசாத்திடப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதியமைச்சர் பதவியிலிருந்து பீர் சேகுதாவூத் ராஜினாமா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பீர் சேகுதாவூத், உள்நாட்டு வர்த்தக கூட்டுறவு பிரதியமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளார். அமைச்சர் பதவியை பெற்று முஸ்லிம் காங்கிரஸை பிளவுபடுத்த முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இந்நிலையில் குறித்த பிரதி அமைச்சர் பதவி தனக்கு அவசியமில்லை என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பீர் சேதாவூத் மேலும் தெரிவிக்கையில், கட்சியை பிளவுபடுத்தும் செயற்பாடுகளில் நான் ஈடுபடவில்லை. அரசாங்க வாகனங்களை பயன்படுத்தி அரசுக்கு எதிராக தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவது சிறந்ததல்ல என்ற காரணத்தினாலும் அமைச்சு பதவியை இராஜினாமா செய்கின்றேன்.

இன்று முதல் கிழக்கு மாகாண சபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு ஆதரவாக பிரசார நடவடிக்கையில் ஈடுபடவுள்ளேன். எனது இராஜினாமா தொடர்பில் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் திறந்த மனதுடன் காலை கலந்துரையாடிய பின்னரே இத்தீர்மானத்தினை நான் மேற்கொண்டேன். எவ்வாறாயினும் தொடர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளராகச் செயற்படுவேன் என்றார்.

# தமிழ் பொலிஸார் இருவருக்கு இடமாற்றம்


(கரணவாய்)

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய தமிழ் தெரிந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் திடீரென் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் முறைப்பாடுகளைத் தெரிவிப்பதில் மக்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் சகோதரமொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையாற்றிவரும் நிலையில் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமிழ் தெரிந்தவர்களாக இருப்பதால் மக்கள் முறைப்பாடுகளைச் சிரமமின்றி முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் முறைப்பாடுகளும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தீர்வு எடுக்கப்பட்டது. எனினும் தற்போது இந்நிலைமையால் தாம் சிரமங்களுக்குள்ளாகியுள்ளதாக இப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (18)

# வைத்திய அதிகாரி யமுனாநந்தா விபத்தில் காயம்



யாழ்.காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கலாநிதி யமுனாநந்தா பயணித்த வாகனம் விபத்திற்குள்ளானது. நேற்றுமுன்தினம் வைத்தியர் தனது வாகனம் பழுதடைந்த நிலையில் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் மற்றொரு வாகனத்தில் பயணித்துள்ளார்.

இந்நிலையில் கிளிநொச்சி பரந்தன் பகுதியில் அந்த வாகனம் முன்னால் சென்று கொண்டிருந்த பஸ் உடன் மோதி விபத்திற்குள்ளானது. இதில் வைத்தியரின் இரண்டு கால்களும் முறிவடைந்த நிலையில் வாகனத்தின் சேதமடைந்த பாகங்களை வெட்டியே வைத்தியரை மீட்டுள்ளனர். எனினும் சாரதிக்கு எதுவிதமான காயங்களும் ஏற்பட்டிருக்கவில்லை. வைத்தியர் சிக்கிச்சைக்காக தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# அபிவிருத்திப் பணிகளுக்கு சீனாவிடம் கடன்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்காக சீன வங்கி ஒன்றிடம் 600 மில்லியன் டொலர்களை கடன்பெற அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை எதிர்வரும் வாரங்களில் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சீனாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியிடம் இருந்து இந்தக் கடன் தொகை பெறப்படவுள்ளது.

இதேவேளை கதிர்காமம் வரையில் தொடருந்துப் பாதையை நீடிப்பதற்காக, இதே வங்கியிடம் இருந்து 278 மில்லியன் டொலர்கள் கடன் வாங்கப்படவுள்ளது. கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை வெளியிடும் ஊடக சந்திப்பின் போது, அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

# இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில்



டான் தொலைக்காட்சி நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.எஸ்.குகநாதனின் தாயார் இராசம்மா சுப்பையா கடந்த 15 ஆம் திகதி ஜேர்மனியில் காலமானார். இவரின் இறுதிக்கிரியைகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் நடைபெற்றது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.